Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 06 (10.01.2003) வெள்ளிக்கிழமை இதழ் : 101

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

DSI பாதணிகளின்
யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

SUPER SHOES
சுப்ப சூஸ்

இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-414)

## அரசின் மீள்குடியேற்ற நடவடிக்கை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்!

### பேச்சுக்களின் முடிவில் பாலா கருத்து



(பாங்கொக்)

உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு அருகில் உள்ள இடங்களில் மக்களைக் குடியேற்ற அரசு இப்பேச்சுக்களில் இணங்கியுள்ளது. இப் பகுதிகளிலும் தற்போது இராணுவமே நிலை கொண்டுள்ளது. இப்பகுதிகளில் மக்களை முதற்கட்டமாக குடியேற்றிய பின்னர், இரண்டாம் கட்டமாக பாதுகாப்பு வலயத்துள் மக்களைக் குடியேற்ற இணக்கம் காணப்பட்டுள்ளது. இவ்வாறு- விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றைய பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களிடையே பேசியபோது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள படைநிலைகளை மாற்றியமைத்து, மக்கள் மீளக்குடியமர வசதி செய்ய இந்திய இராணுவ அதிகாரி நம்பியார், பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி மைக்கல் றோஸ் ஆகியோரின் ஆலோசனை உதவிகளைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் பீரிஸ், ஹெல்கிசன், பாலா

# பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே மீள்குடியமர ராணுவம் அகலும்!

## சர்வதேச நிபுணர்களின் அறிக்கையின் பின்பே பாதுகாப்பு வலயத்திற்குள் குடியமர அனுமதி

(பாங்கொக்)

**தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 4 ஆம் கட்டப் பேச்சுக்கள் நேற்று முடிவடைந்தன. இப்பேச்சுகளில் உயர் பாதுகாப்பு வலயங்களினுள் மக்களை மீள்குடியமர்த்துவதற்கான கால அட்டவணைத்திட்டம் ஒன்று இருதரப்பினதும் இணக்கத்துடன் முன் வைக்கப்பட்டது.**

யாழ்.மாவட்டத்தில் துரித மீள் குடியேற்ற நிகழ்வுக்கான நடவடிக் கைத்திட்டம் (Action plan for an Accelerated Resettlement Programme for Jaffna District) எனப் பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின்படி-

- முதற்கட்டமாக, பெப்ரவரி 7ஆம் திகதிக்கு முன்பாக இது தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்ளவும்,
- பெப்ரவரி 14 ஆம் திகதிக்கு முன், இம்மதிப்பீட்டுத் திட்டத்தின் சிபார்சுகளின் அடிப்படையில் விடயங்களை இனங்காணவும் என கால அட்டவணை இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதைவிட, எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதிக்குமுன் இராணுவம் பயன்படுத்தும் பொதுமக்களின் சொத்துக்கள் மற்றும் உடமைகள் மீண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறந்த தமிழனாக பிரபாகரன் தெரிவு



(சென்னை)

'தற்ஸ் தமிழ்' என்ற உலகளாவிய தமிழ் இணையத்தளம் நடாத்திய 2002 ஆம் ஆண்டின், சிறந்த தமிழன் யார்? என்ற உலகந்தழுவிய போட்டியில்- தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் - அதிகூடிய வாக்குகளையும், சிறப்பான அபிப்பிராயங்களையும் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இன்று இலட்சக்கணக்கான தமிழர்களின் விடியலும், எதிர்காலமும் பிரபாகரன் என்ற ஒரே தனி மனிதரின் அசைவில்தான் இருக்கிறது என்பது அசைக்க முடியாத உண்மை என்றும்,

இந்த ஆண்டின் உலகின் மிகப்பெரிய தலைப்புச் செய்தியானவரும் அவரே என்றும் 'தற்ஸ் தமிழ்' அறிவித்துள்ளது.

## போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து இரு தரப்பும் மாதாந்தம் ஆராய்வர்

(நகொன்பத்தம்)

போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு அமைவாக - மாதாந்தம்- ஒப்பந்த வழிமுறைகளையும், மீறல்களையும் கலந்தாய்வு செய்வதற்கு- அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒவ்வொரு மாதமும் சந்தித்துப் பேச தாய்லாந்தில் இணக்கம் காணப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் ஒழுங்கு செய்யப்படும் இச்சந்திப்பில், ஒவ்வொரு மாதத்திற்குமான கண்காணிப்புக் குழுவின் அறிக்கையிலுள்ள விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வருகின்றார் கோபி அனான்



ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் அடுத்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யும் போது யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஒருவர் இலங்கைக்கு வரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இந்தமுறையாவது சொன்னபடி செய்வினமோ எண்டு பாப்பம்...

## படையினரை வெளியேறக் கேட்பது இராணுவ நலனைக் கருதியல்ல!

### கிழக்குத் தளபதி கேணல் கருணா

(பாங்கொக்)

'உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பொதுமக்களின் குடியிருப்புக்களை இராணுவத்தினர் பிடித்து வைத்திருப்பது என்பது, இலங்கை இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் என்று உலகுக்கு எடுத்துக் காட்டுவது போல் உள்ளது'. இவ்வாறு நேற்றைய பேச்சுக்களின் முடிவில் மூத்த தளபதி கருணா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து படையினரை வெளியேறும்படி நாம் கூறுவது, இராணுவ நலன் கருதியல்ல, மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே நாம் இவ்வாறு கோருகிறோம். யாழ்.மாவட்டத்தில் இருக்கும் கடும்போக்கான இராணுவத் தளபதி விட்டுக்கொடுப்பின்றி செயற்பட்டு வருகிறார். அவர் தமிழ் மக்களை வதைத்து, தான் ஒரு கதாநாயகனாக மாறுவதற்கு முற்படுபவராக இருந்தால், அது கடும் போக்கான இராணுவ ஆக்கிரமிப்பு என்பதை உலகுக்கு அவரே எடுத்துச் சொல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மிலிந்த இந்தியா விரைவு

(நகொன்பத்தம்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் முடிவடைந்ததும், நேற்றுமாலையே அமைச்சர் மிலிந்த மொறகொட அங்கிருந்து இந்தியா பயணமானார்.

பேச்சுவார்த்தை விபரங்களை இந்தியத் தலைவர்களுக்கு தெரிவிப்பதற்கே அவர் புதுடெல்கி சென்றதாகத் தெரியவருகிறது.

புதுடெல்கியில் அவர், அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மாற்றங்களைச் செய்வது பற்றி ஆராயவுள்ள இந்தியப் படையதிகாரி சதீஸ் நம்பியாரையும் சந்திக்கவுள்ளார்.

# போர் விமானங்கள், பயணிகள் விமானம் துருக்கியில் நடுவானில் வெடித்துச் சிதறின



இதே ரகப் பயணிகள் விமானமே வீழ்ந்தது. உள்ளே- நொறுங்கிய யுத்த விமானங்கள்

(அங்காரா)

இரண்டு துருக்கிப் போர் விமானங்கள் நடுவானில் மோதிச் சிதறின. இதன்போது இரு விமானங்களிலுமிருந்த நான்கு விமானப் படையினரும் பலியாகினர். F-4 ரக போர் விமானங்களே பயிற்சியிலீடுபட்டிருந்தபோது விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து நடைபெற்ற மலாட்டியா மாகாணத்தில், இந்த விபத்து நடைபெற சில மணி நேரங்களின் முன்பு, துருக்கியின் RJ-100 ரக பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 75 பயணிகள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. கடும்பனி மூட்டக் காலநிலையே இவ்விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் ஈராக் மீது நடாத்தவிருக்கும் வான் தாக்குதலுக்கு வசதியாக அமெரிக்க விமானங்கள் துருக்கி விமானப்படைத்தளங்களையே பாவித்து வருகின்றன. இந்நிலையில் விமான விபத்துக்கள் துருக்கியில் இடம்பெற்றுவருவது பல சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது.

வீழ்ந்து நொருங்கிய துருக்கிய பயணிகள் விமானத்தில் நான்கு பிரிட்டிஷாரும் ஒரு அமெரிக்கரும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இவ்விமான விபத்தில் உயிர் தப்பிய



காயமடைந்த அலியே

ஐவரில் ஒருவரான, அலியே இல் என்னும் பெண் தகவல் தருகையில், விமானம் தரையிறங்க ஆயத்தமானபோது திடீரென வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாகக் கூறுகிறார். விமானத்தின் கறுப்புப்பெட்டி ஆய்வுக்காக பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளது.



இஸ்ரேலுக்கும் மேற்குக் கரை நகரான ஜெனினுக்கும் இடையில் உள்ள பாதுகாப்பு வேலி அருகே, இஸ்ரேல் இராணுவ ரோந்து படையணியின் வீரர் ஒருவர் காணப்படுகின்றார்.

உலகவலம்

## அவுஸ்ரேலியா தோல்வி

நேற்று நடைபெற்ற வி.பி முக்கோண இரண்டாம் கட்ட ஒருநாள் ஆட்டத் தொடரின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி அவுஸ்திரேலிய அணியை 79 ஓட்டங்களால் வெற்றிகண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஐந்து விக்கட் இழப்புக்கு 343 ஓட்டங்களைப் பெற்றது. இதில், சனத் ஜயசூரிய 122 ஓட்டங்களும் மார்வன் அத்தப்பத்து 101 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 49.3 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 264 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது.

## இஸ்ரேல் பொதுத் தேர்தலில்
# அராபியர்கள் போட்டியிட உயர்நீதிமன்று அனுமதி



தடைநீக்கப்பட்ட அஸ்மி

இஸ்ரேலின் உயர்நீதிமன்றம், அராபிய பிரஜைகள் இருவர் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியுள்ளது.

அஸ்மி பிஸ்ஹாரா மற்றும் அஹமட் லிபி ஆகியோரே தடை நீக்கப்பட்ட இஸ்ரேல் வாழ் அராபியர்களாவர். இவர்கள் பலஸ்தீனத் தாக்குதல்களுக்கு ஆதரவு வழங்குவதாக, முன்னர் இஸ்ரேல் ஆணையகம் குற்றஞ்சாட்டியிருந்தது.

# அக்னி ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகச் சோதித்தது



800 கிலோமீற்றர் தூரம் பாயக்கூடிய அணுவாயுதம் காவிச்செல்லக்கூடிய ஏவுகணைப் பரிசோதனையை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. அக்னி -1 எனும் இத்தகைய ஏவுகணைகள் மீது அடுத்த சில வாரங்களுக்கு இத்தகைய ஆய்வுகள் தொடரப்படவுள்ளன.

அக்னி -1 ஏவுகணை இடைத்தூர வீச்சுக்கொண்டதாகும். இது நகரக்கூடிய வாகனங்களில் எடுத்துச் செல்லப்படக் கூடியது.

பாகிஸ்தான் தனது இராணுவத்துக்கு இடைத்தூர - அணுவாயுத ஏவுகணைகளை வழங்கியதைத் தொடர்ந்தே இந்தியாவின் இத்தகைய ஏவுகணைச் சோதனை அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# காணாமற்போனோர் குறித்த விசாரணைகள் மனித உரிமை ஆணைக்குழு ஆரம்பித்தது

காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ளவென, மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்ட விசாரணைக குழுவின் விசாரணைகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்காக, மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான செயற்திட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரான எம்.சி.எம். இக்பால் மற்றும் ஆய்வு உத்தியோகத்தர்களான ஆர்.மங்கையற்கரசி, சுபாஸ்கர் சுப்பிரமணியம் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தனர்.

இவர்கள் மூன்று நாட்கள் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொள்வார்கள். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட காணாமற்போனோர் சம்பந்தமான 59 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளே நேற்று முன்தினம் ஆரம்பமாகின. இவ்விசாரணைகள் இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

# குப்பிளானில் மிதிவெடிக்கு இளைஞன் காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் தெற்கில் தோட்டத்தைக் கொத்தும்போது, மிதிவெடி வெடித்ததில் இளைஞர் ஒருவர் தனது காலை இழந்தார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ம.ரவிச்சந்திரகுமார் (வயது 27) என்பவரே தனது வலது காலை இழந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நீண்ட காலமாக பாவனைக்குட்படாத தோட்டக்காணியை துப்பரவு செய்யும்போதே, இச்சம்பவம் நிகழ்ந்ததாகவும், இதில் இன்னொருவருக்கு தலையில் சிறுகாயம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

ராஜா
யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
சுந்தரா ட்ராவல்ஸ்
10.30, 2.30, 6.00
(சி-398)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சூர்யா, லைலா, சினேகா நடித்த
உன்னை நினைத்து
10.01.2003 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும் SPIDER MAN
(சி/397)

## சிறு விளம்பரம்

### மூக்குக் கண்ணாடி

1962 ஆம் ஆண்டு தொடக்கம் வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கிய மொறாயஸ் மூக்குக்கண்ணாடி அகம், தற்பொழுது- பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன்பாக இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல்மூக்குக் கண்ணாடி அகம், யாழ்ப்பாணம். (சி/439)

### தேவை

மீன் பிடிக்கும் வலைக்கு சாயம் போடும் கண்டல்பட்டை (காய்ந்தது) நல்ல விலைக்கு வாங்கப்படும்.

க.செ.கைலாசப்பிள்ளை அன்சன்ஸ், 76,பெரிய கடை (மருந்துக் கடை) யாழ்ப்பாணம். (சி/411)

# வைரஸ் நோய்த் தாக்கம் இளம் பெண்களிலேயே அதிகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சல் அதிகமாக இளம் பெண்களையே தாக்கியுள்ளதாக யாழ்.மருத்துவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வைரஸ் காய்ச்சலின் தாக்கத்துக்குட்பட்டு யாழ்.போதனா மருத்துவமனையில் இதுவரை அனுமதிக்கப்பட்டவர்களில், அறுபது வீதமானவர்கள் இளம் பெண்களாக உள்ளனர். இதனால், வைரஸ் தொற்று இளம் பெண்களில் இலகுவில் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது. (க)

# பௌத்த மத பீடாதிபதிகளை அகாஷி சந்தித்துப் பேசுவார்

(கொழும்பு)

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் அகாஷி, பௌத்த மத பீடாதிபதிகளுடனும், மற்றும் சிங்கள அமைப்புக்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக செயற்பட்டுவரும் இந்த பௌத்த மத பீடாதிபதிகளின் மகா நாயக்கர்களுடனும், சிங்கள பௌத்த அமைப்புக்களுடனும் இவர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி அகாஷி இலங்கைக்கு வரவுள்ளார். இவர் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும், பல்வேறு அரசியல் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடுவார்.

அத்துடன் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர்களையும் சந்திப்பார் எனவும் தெரியவருகின்றது.

SELVA ELECTRICALS
○ தரமான மின்சார உபகரணங்கள், P.V.C. குழாய்கள், இணைப்புக்கள் என்பவற்றை நியாய விலை, உத்தரவாதம் என்பவற்றுடன் பெற்றுக் கொள்ளவும்.
○ கட்டடங்களுக்கான மின் இணைப்புகள் (வயறிங்), பைப் லைனிங் வேலைகளை சிறந்த முறையில் செய்து கொள்ளவும்.
நாடவேண்டிய ஒரே இடம்
செல்வா எலெக்ரிக்கல்ஸ்
இல.68, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

# இலங்கைக்கென தனியான சமஷ்டி கனேடிய நிபுணர்கள் ஆலோசனை!

உலகின் பல்வேறு நாடுகளின் சமஷ்டி அமைப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டபோதிலும், இலங்கைக் கெனத் தனியான, தனித்துவமான சமஷ்டியே உருவாக்கப்பட வேண் டுமெனக் கனேடிய சமஷ்டிமுறை தொடர்பான அமைப்பின் நிபுணர் கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்தின் நகொன்பத்தம் நகரில் இடம்பெற்ற சமாதானப் பேச் சுக்களில் கனேடிய சமஷ்டி நிபுணர் களும் பார்வையாளர்களாகப் பங் கேற்றனர்.

இவர்களைக் கடந்த செவ்வா யன்று மாலை விடுதலைப் புலிக ளின் அரசியல் ஆலோசகர் கலா நிதி அன்ரன் பாலசிங்கம் தலை மையிலான குழுவினர் சந்தித்துத் தனியான பேச்சுக்களை நடத்தியி ருந்தனர். இப்பேச்சு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

அரச தரப்புக் குழுவினரும், அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கனே டிய சமஷ்டி நிபுணர்களுடன் கலந் துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்களின் பின்னர் சமஷ்டி அமைப்புத் தொடர்பான நிபுணர் கார்ள் நரேன்பேர்க் கருத் துத் தெரிவித்தபோது -

நாம் கனேடிய சமஷ்டி அமைப் புக் குறித்து மட்டும் இந்தப் பேச்சுக் களில் பிரேரிக்கவில்லை. மற்றைய சமஷ்டி அமைப்புக்கள் குறித்தும், அதிலுள்ள அம்சங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடி வருகின் றோம்.

இலங்கைக்கெனத் தனியான சமஷ்டி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கனேடிய சமஷ்டி அமைப்பின் நிபுணர் குழுவில், அமைப்பின் தொடர்பாடற் பணியாளர் கார்ள் நரேன்பேர்க், ஒன்ராறியோ மாநில முன்னாள் முதல்வர் பொப்றே, கனேடிய மத்திய மாகாண அரசுக ளின் உயர் அதிகாரி டேவிட் கம ரூன் ஆகியோர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்குழுவினர் இலங்கை வந்து அரசு மற்றும் புலி களுடன் முன்னதாக சமஷ்டி தொடர்பாகப் பேசியிருந்தனர்.

## குடாநாட்டில் ஆயிரம் ரூபா கள்ளநோட்டு ஏச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்து!

(நெல்லியடி)

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் தாராளமாகப் புழங்குவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் வங்கி ஒன்றில் ஒருவர் மூன்று லட்சம் ரூபாவை வைப்புச் செய்யச் சென்றபொழுது, அவரது பணக்கட்டிலிருந்து 3 கள்ள நோட்டுக்கள் வங்கி அதி காரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு அவை துளையிடப்பட்டு ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை - இந்தக் கள்ளநோட்டுக்கள் கண்டு பிடிக்கமுடியாதவாறு மிக நேர்த்தியாகவும், அசல்போல வும் அச்சிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வங்கிகளில் உள்ள மின்னணு காசு எண்ணும் இயந் திரங்களே இந்தக் கள்ள நோட்டுக்களை இனங்கண்டு கொள்வதாகவும், மற்றைய வழிகளில் இந்தக் கள்ள நோட்டுக்களை இனம் காண்பது கடினம் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இவ்வாறான கள்ள நோட்டுத் தொடர் பில் மக்களை விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் வங்கி அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (13)

## சின்னஞ் சிறு செய்திகள்

### வைரஸ் காய்ச்சலுக்கு இரண்டு வயதுச் சிறுமி நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் வைரஸ் காய்ச் சலினால் பீடிக்கப்பட்ட இரண்டு வயதுச் சிறுமி சிகிச்சை பலனளிக் காது நேற்று அதிகாலை மரணமா னார்.

அச்சுவேலி, வசாவிளானைச் சேர்ந்த குணரத்தினம் நிலாணி (வயது - 2) என்ற சிறுமியே வைரஸ் காய்ச்சலுக்குப் பலியானார்.

கடந்த 6ஆம் திகதி காய்ச்ச லினால் அச்சுவேலி வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி நேற்றுமுன்தினம் போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது அங்கு மர ணமானார். (ச,கி)

### யாழ். குடாநாட்டில் வெற்றிலைச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்.குடாநாட்டுக்குள் பெருமளவு வெற்றிலை எடுத்துவரப்படுவதால், யாழ். குடாநாட்டு வெற்றிலைச் செய் கையாளர்களைப் பெரிதும் பாதித் துள்ளதாக விவசாயிகள் தொிவிக் கின்றனர்.

இந்நிலை தொடருமானால் தமது உற்பத்தியைச் சந்தைப் படுத்துவ தில் பெருஞ்சிரமத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் வடபகுதி வெற்றிலைச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (34)

### இளைஞர் படையணிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் படையணிக்கு ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்படிவங்க ளைப் பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறும், இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் பிரதேச செயலகத்து டன் தொடர்புகொள்ளுமாறும் கேட் கப்பட்டுள்ளது.

### 16 ஆம் திகதி கிளிநொச்சி பாடசாலைகளுக்கு விடுமுறை

(பளை)

எதிர்வரும் 16 ஆம் திகதி வியா ழக்கிழமை கிளிநொச்சி மாவட்டத் தில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை தினமாகப் பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக எதிர்வரும் 25 ஆம் திகதி பாடசாலைகள் நடை பெறுமெனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினத் தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (115)

### திருமறைக் கலாமன்ற அரங்க நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண திருமறைக் கலா மன்றத்துடன் ஜேர்மனி 'ஹல்ஸ் பேக்' நாடகக் குழுவினர் இணைந்து நிகழ்த்தும் அரங்க நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வீரசிங்கம் மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ், முஸ்லிம், சிங்களக் கலைஞர்கள் நிகழ்த்தும் 'கண்ணுக் குத்தெரியாத சுவர்' மௌன நாடக மும், ஜேர்மனி இசைக் கலைஞர்கள் நிகழ்த்தும் இசைநிகழ்வும், சிறப்பு நிகழ்ச்சியாக ஜேர்மனி 'ஹல்ஸ்பேக்' நாடகக்குழுவினரின் 'கனவுப்பெட் டகம்' நாடகமும் இடம்பெறவுள்ளது.

### நல்லூரில் சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் - இன்று "நானும் தானும்" எனும் விடயம் தொடர்பாகத் திருமுறைச்செல்வன் ச.விநாயகமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

## காணாமற்போனோர் தொடர்பாக பிரட்மன் வீரக்கோனுடன் பேச்சு

### முழுவிபரம் வெளியிட வற்புறுத்து

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போ னோரின் பாதுகாவலர் சங்கத்தினர், காணாமற்போனோர் தொடர்பாக, பிர தமரின் செயலாளர் பிரட்மன் வீரக் கோனைச் சந்தித்து நேற்றுமுன்தி னம் பேச்சு நடத்தினர்.

கடந்த அரசாங்கக் காலத்தில் குடாநாட்டில் சிறிலங்காப் படையின ரால் பிடிக்கப்பட்டுக் காணமற்போன 650 இற்கு மேற்பட்ட தமிழர்களில் 240 பேர் இறந்துவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த 240 பேரும் எப்படி இறந் தார்கள் என்று தமக்கு அறிவிக்க வேண்டும். மேலும், 45 பேர் வெவ் வேறு இடங்களில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாக இராணுவத் தளபதி அறிவித்திருந்தார், இவர்கள் எங்கே தடுத்து வைக்கப்படடுள்ளனனர் எனறு தெரிவிக்கவேண்டுமெனவும் பிரட்மன் வீரக்கோனிடம் காணாமற் போனோரின் உறவினர் சங்கத்தினர் கேட்டுக் கொண்டனர்.

## வட - கிழக்கு கல்வி அபிவிருத்தி 3ஆவது செயலமர்வு கிளிநொச்சியில்

2003 ஆம் ஆண்டிற்கான வட- கிழக்கு மாகாணக் கல்வி அபி விருத்தி தொடர்பான மூன்றாவது செயலமர்வு கிளிநொச்சியில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வு நாளை ஆரம்பமா கும். இந்தச் செயலமர்வு தொடர்ந்து மூன்று நாட்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழக் கல்வி மேம் பாட்டுப் பேரவையின் மாநாட்டு மண் டபத்தில் மாகாணக் கல்விப் பணிப் பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வட-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செய லாளர், திட்டமிடல் பிரிவுப் பணிப் பாளர்கள், வலயக்கல்விப் பணிப் பாளர்கள், கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந் துகொள்ளவுள்ளனர் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரி வித்தார். (ரா)

## அச்செழு வீதித்தடையால் பொதுமக்கள் படும் சிரமம்

(அச்செழு)

அச்செழு அம்மன் ஆலயப் பிரதான வீதி மக்கள் பாவனைக்கு நீண்ட காலமாகத் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு மக்கள் படிப் படியாகத் திரும்பும்வேளை, மேற்படி வீதி பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடாமல் வைத்திருப்பது குறித்துப் பொதுமக்கள் விசனம் தெரிவிக் கின்றனர். இவ்வீதித்தடையால், அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் பொது மக்கள், நீண்டதூரம் சுற்றியே செல்லவேண்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

### பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய

## படைத்தளபதிகளுடன் சந்திப்பு தவறான செய்தி எனத் தெரிவிப்பு

அதி உயர்பாதுகாப்பு வலயம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா யாழ். குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் படை அதிகாரிகளை அழைத் துப் பேசியதாக வெளியான செய்தி தவறானதென ஜனாதிபதியின் ஊட கப் பேச்சாளர் ஹரீம் பீரீஸ் தெரி வித்துள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர் பாக புலிகள் - அரசுக்கு வழங்கிய அறிக்கையை ஜனாதிபதி சந் திரிகா ஆராய்ந்து வருவதாகவும், இங்கு மக்கள் மீளக்குடியேறுவது தொடர்பாக எந்த அபிப்பிராயத்தை யும் வெளியிடவில்லை எனவும் ஜனா திபதியின் பேச்சாளர் மேலும் தெரி வித்தார்.

### மிலேனியம் சிற்றி ஆயுதக் களஞ்சியம்

## பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க ஜனாதிபதி உத்தரவு!

(கொழும்பு நிருபர்)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி யில் இராணுவத்தின் விசேட ஊடுரு வித் தாக்கும் படையணியினர் ஆயு தங்களை மறைத்து வைத்திருந்த விவகாரம் தொடர்பாக - விசாரணை களை மேற்கொள்ள பொலிஸ் அதி காரிகளை நியமிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி சந்தி ரிகா உத்திரவிட்டுள்ளார்.

அத்துருகிரிய - மிலேனியம் சிற்றி ஆயுதக் களஞ்சிய விவகாரம் தொடர்பாக விசாரணைகளை மேற் கொள்ள ஜனாதிபதி சந்திரிகா விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்திருந்தார்.

இந்தக் குழுவின் செயற்பாட் டுக்குத் தேவையான பொலிஸ் அதி காரிகள் நியமிக்கப்படாமையால் - பல மாதங்களாக இந்த விசார ணைக்குழு செயற்படாதுள்ளது.

இதனால், உடனடியாக இவ் விசாரணைகளைத் துரிதப்படுத்துவ தற்கு ஏற்ற வகையில் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்குமாறு - ஜனாதிபதி சந்திரிகா, நேற்றுமுன் தினம் பொலிஸ் மா அதிபர் ஆனந் தராஜாவுக்கு உத்தரவிட்டிருக்கி றார். (01)

### விளக்கமறியலில் உள்ள சிப்பாய் சார்பில்

## சட்டத்தரணியை நியமிக்குமாறு புலிகளின் நீதித்துறை அறிவிப்பு!

(நமது நிருபர்)

கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றத் தினால் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ள இராணுவச் சிப்பாய் இன்று மீண்டும் மன்றில் ஆஜர்படுத்தப்பட வுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி மணலா றுப் பகுதியில் புலிகளின் பிரதேசத் துககுள் ஆயுதத்துடன் ஊடுருவிய போதே இராணுவச் சிப்பாய் கைதா னார். இவர் கிளிநொச்சி நீதிமன் றத்தால் இன்று 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இன்று இச்சிப்பாயை நீதிமன்றத் தில் ஆஜர்செய்யும்போது அவரின் சார்பில் சட்டத்தரணியை ஆஜராகு மாறு புலிகளின் நீதித்துறை பெற் றோருக்கும் இராணுவத் தளபதிக் கும் அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பான கடிதப் பரிமாற் றங்களைச் சர்வதேச செஞ்சிலு வைச் சங்கம் செய்துவருவதாக அதன் பிரதிநிதி சுகுமார் றொக்வூட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று கிளிநொச்சி நீதிமன்றில் நிறுத்தப்படும் சிப்பாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்படலாம் அல் லது விடுவிக்கப்படலாம் எனக் கரு துவதாகத் தெரிவித்தார்.

### திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன், ஆயர் கடவை சித்திவிநாயர் ஆலயத்தில் வருடாந்தத் திருவாசக முற்றோதல் விழா நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.(கி,ச)



நகொன்பத்தம் நகரில் நடைபெறும் பேச்சுக்களினிடையே அரச தரப்புப் பிரதிநிதிகள் ஹக்கீம், மிலிந்த, பீரிஸ் ஆகியோர் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# பளைப் பகுதி இழந்துபோன கல்விச்சூழல் மீண்டும் பெற சகல வசதிகளும் தரப் படும்

## வன்னிப்பிராந்திய கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம்

"பளைப் பிரதேசம் இழந்துபோயுள்ள கல்விச்சூழலை மீண்டும் பெற எம்மாலான அனைத்து வசதிகளையும் செய்துதருவதுடன், போக்குவரத்து வசதிகளை இலகுவாக்கி தருவதற்கு ஆவன செய்து தருவோம்"

என வன்னிப் பிராந்தியக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்துள்ளார்.

பளை மத்திய கல்லூரியை மீளவும் பழைய இடத்தில் இயங்கவைப்பது தொடர்பான விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.அரியரத்தினம் உரையாற்றுகையில் -

ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் பளைப் பிரதேசம் இதுவரை காலமும் இழந்த, தன்னுடைய கல்வியை மீட்டெடுக்க முடியும். கடந்தகாலங்களில், பளை மத்திய கல்லூரி- வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் பிற உத்தியோகத்தர்களை உருவாக்கியுள்ளது.

ஆனால், அண்மைக் காலங்களில் இந்த நிலைமை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு இடப்பெயர்வு காரணமாகி விட்டது. ஆனால் நாம் மனதைத் தளரவிடாது பணியாற்ற வேண்டும்.

ஆசிரியர்கள் காலதாமதமாகப் பாடசாலைக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும். ஆசிரியர்கள் தம்மைப் பாடசாலைச் சூழலுடன் இணைத்துக் கொண்டால் இதனை தவிர்க்க முடியும். தொடர்ந்து, பாடசாலைக்குக் காலதாமதமாக வரும் ஆசிரியர்கள் கஷ்ரப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்வதைத் தவிர வேறுவழியில்லை எனத் தெரிவித்தார். (115)

# அரியாலைப் பிரதேசங்களில் களவாக ஏற்றப்படும் மண்!

(அரியாலை)

அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் ஆட்களற்ற வீடுகளின் வளவுகளில் உள்ள மண், உழவு இயந்திரங்களின் மூலம் களவாக எடுத்துச் செல்லப்படுகின்றது.

மேற்படி பகுதிகளில் உள்ள வீடுகளில் இராணுவத்தினர் வெளியேறிய போதும், சிலர் மிதிவெடி அச்சம் காரணமாக இன்னும் குடியேறாததால் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே மண் எடுத்துச் செல்லப்படுகிறது.(55)

## பளைக்கோட்டத்தில்

# ஆசிரியர் பற்றாக்குறை; தற்காலிக நடவடிக்கை!

(பளை)

பளைக் கோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய, தற்காலிக நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளன.

இதன்படி பளைக் கோட்டப் பாடசாலைகளிலுள்ள மேலதிக ஆசிரியர்கள் அந்தக் கோட்டத்திலேயே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதன்மூலம் ஆசிரியர் பற்றாக் குறை சிறிதளவு ஈடுசெய்யப்பட முடியும் என்று, பளை மத்திய கல்லூரியைப் பழைய இடத்தில் இயங்க ஆரம்பிக்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

# மாலுசந்தி அலுவலகம் முன் நாணயக்குற்றித் தொலைபேசி

## ரெலிகொம் புதிதாக அமைத்தது

(நெல்லியடி)

பருத்தித்துறை- மாலுசந்தியில் அமைந்துள்ள ரெலிகொம் அலுவலகத்திற்கு முன்பாக, புதிதாக ஒரு நாணயக் குற்றித் தொலைபேசி பொருத்தப்பட்டுள்ளது. மாலுசந்தியிலும், நெல்லியடியிலும் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த இத்தகைய நாணயக் குற்றித் தொலைபேசிகள் விஷமிகளால் செயலிழககச் செய்யப் பட்டதைத் தொடர்ந்து அவை அகற்றப்பட்டன. அதன் பின் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் ஒரு தொலைபேசி பொருத்தப்பட்டது.

இதேவேளை- ரைரெல் நிறுவனத்தினால் நெல்லியடிச்சந்தியில் அமைக்கப்பட்டிருந்த அட்டைத் தொலைபேசிகள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் இவற்றினை அதிகளவு பாவிக்காமையும் வருமானமின்மையுமே இவை அகற்றப்படக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## கடற்படை டோறா மோதிய சம்பவம்

# பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பத்துக்கு உடனடி மனிதாபிமான உதவி வழங்குக

## அதிகாரிகளுக்கு சமாசம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறுக் கடலில் மீனவர்கள் மீது கடற்படை டோறாப்படகு மோதிய சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்திற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மனிதாபிமான உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வடமாகாண கடற்தொழிலாளர் சமாசம் கோரியுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி தொண்டமனாறுக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் மீதான தாக்குதல் ஓர் தற்செயலான சம்பவம் எனக் கூறமுடியாது. இது அப்பாவி மீனவர்கள் மீது கடற்படையினரால் வேண்டும் என்றே நடாத்தப்பட்ட ஓர் தாக்குதலாகும்.

இதனால், தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையிலும் கடந்த காலப் போரினால் கஷ்டப்பட்டுள்ள மீனவர்கள் தமது தொழிலைச் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இதுபோல், இனி கடற்படையினரால் எந்தவிதமான தாக்குதல் சம்பவமும் தொடரக்கூடாது எனவும், இந்தத் தாக்குதலை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் வடமாகாண கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் சி.தவரெட்ணம் தெரிவித்துள்ளார். இத்தாக்குதல் சம்பவத்தில் மீனவர் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்தது தெரிந்ததே.

## மீன்விலை உயர்வு

(யாழ்ப்பாணம்)

மீன்பிடித்தடைகளில் ஓரளவு தளர்வுகள் ஏற்பட்டுள்ளபோதும் யாழ்ப்பாணம் சின்னக்கடை மற்றும் ஏனைய சந்தைகளில் மீனின் விலை உயர்வாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சின்னக்கடைச் சந்தைக்கு இப்போது பன்றி இறைச்சியும் எடுத்து வரப்படுவதாகத் தெரியவருகிறது.

## சமாதான நீதிவான்

(யாழ்ப்பாணம்)



அல்வாய் வட மேற்கைச் சேர்ந்த சி.திரவியம் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார். திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட மேலதிக நீதிபதி ரி.எல்.ஏ.மனாவ் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக்கொண்டார்.

# 86 பேருக்கு செயற்கை அவயவம் இணுவில் நிலையத்தில் பொருத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஆதரவுடன் இணுவில் பகுதியில் இயங்கிவரும் செயற்கை அவயவ உற்பத்தி நிலையத்தில் இதுவரை 84 பேருக்குச் செயற்கைக் கால் பொருத்தும் பணியும், இரண்டு பேருக்குச் செயற்கைக் கை பொருத்தும் பணியும் பூர்த்தியாகியுள்ளன.

அத்துடன் ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் மூலம், அவயவங்களை இழந்த 5 வன்னிப் பிரதேசவாசிகள் இங்கு செயற்கை அவயவ உதவிகளைப் பெற்றுள்ளனர். மேலும், 33 பேர் உதவி கோரி விண்ணப்பித்துள்ளதாகச் செஞ்சிலுவைச் சங்கச் செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது. (96)

## கரணவாய் ஆலயத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் மூத்த விநாயகர் கோயிலில் திருட்டுச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி இரவு கோயிலின் ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்கள் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ரேப் ரேடியோ, அம்பிளிபயர், மைக், வயர்கள் ஆகியவற்றையே திருடிச் சென்றுள்ளனர்.

இதுபற்றி ஆலயப் பரிபாலன சபையினர், நெல்லியடிப் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)



திருநெல்வேலி லயன்ஸ் கழகத் தலைவர் கலாநிதி க.குணராசா முச்சக்கர சைக்கிள் வண்டியொன்றினை வலது குறைந்த ஒரு சிறுமிக்கு வழங்குகிறார். பின்னணியில் லயன். எஸ். எஸ். தங்கராஜா, லயன். எஸ். சொக்கலிங்கம், லயன். வி.ஸ்ரீதரன், லயன். எஸ். இக்னீசியஸ் ஆகியோருள்ளனர்.

## மந்திகையில் பனடோல், இன்சுலின் தட்டுப்பாடு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பனடோல், இன்சுலின் போன்ற மருந்துகள் பற்றாக்குறையாக உள்ளன.

இதனால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்க முடியாமல் இருப்பதால், தனியார் மருந்தகங்களிலேயே வாங்கிப் பாவிக்க வேண்டிய நிலைக்கு நோயாளர்கள் உள்ளாகியிருக்கின்றனர் எனத்தெரிய வருகின்றது. (116)

## சொந்த இடத்தில் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம்

(பளை)

தனியார் வீடொன்றில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

முற்றாக அழிந்து போயுள்ள இதன் கட்டடத்தொகுதியின் ஒரு பகுதி, திருத்தம் செய்யப்பட்டு நிர்வாகப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (115)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : ம.அருண்யா
முகவரி: சுன்னாகம் மேற்கு.

ஆறாவது அகவையில்.



பெயர் :ஜெ.ஜீவகி
முகவரி: 2 ஆம் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்





சிந்தி,

உனது கவலைதோய்ந்த கடிதம் கிடைக்கப் பெற்றேன். உனது தோழியின் மகளின் வாழ்வில் ஏற்பட்ட பாதிப்பு உனக்கு மட்டுமல்ல எனக்கும் வேதனையைத் தந்தது.

தாய்மை என்பது மகத்தானது. எதிர்காலச் சந்ததியை உருவாக்கும் மகத்தான பேறு பெண்களுக்கு வாய்த்திருக்கிறது.

ஆனால், அதுவே இயற்கை எமக்குச் செய்த சதி என நாம் வேதனைப்பட வைப்பது மனிதன்தான். மனிதனல்ல, மனித உருவில் உலவும் மிருகங்கள்தான்.

கருத்தரிக்காது போவதற்கு ஆண்கள்கூட காரணமாயிருக்கலாம் என்பது புரிந்தவர்கள்கூட பெண்களைத்தான் குறைகூறி வேதனைப் படுத்துகிறார்கள்.

அதேவேளை, உன் தோழியின் மகளைப்போல் திருமணமாகாமலேயே தாய்மையடையும் பெண்கள் படும் வேதனை சொல்லில் வடிக்க முடியாததாகும்.

மனமொப்பாமலே வல்லுறவுக்குட்படுத்தப்படும் பெண்கள் கருத்தரிக்கும்போது அச்சம்பவம் மறக்கவோ, மறைக்கவோ முடியாததாகி விடுகிறது.

விபத்திலே காலோ, கையோ முறிந்து பின் சுகப்படுவதைச் சாதாரணமாகக் கருதும் நாம் இதனைப் பாரதூரமாகக் கருதுகின்றோம்.

அதேவேளை, வயது வேறுபாடின்றி பெண் என்ற உருவில் குழந்தையைக் கண்டாலும் கிழவியைக் கண்டாலும் மிருகமாக மாறி விடும் ஆண்கள், இன்று சமூகத்தில் மலிந்து வருகிறார்கள்.

பாதிக்கப்படும் பெண்ணைத் தூற்றும் அளவிற்கு, இவர்கள் சமூகத்தால் தூற்றப்படுவதில்லை. இப்படிப்பட்ட மிருகங்களை இனங்கண்டு சமுதாயமே அவர்களைப் புறக்கணிக்கும் நிலையொன்றை உருவாக்க நாம்தான் முன் வரவேண்டும்.

இப்படிப்பட்ட விடயங்கள் வெளிவந்தால் பெண்ணின் வாழ்க்கை பாதிக்கப்படும் என்பதால், அதை வெளியிடுவது உனக்குத்தான் ஆபத்து என்பதைக் கூறியே ஆண் தப்பிவிடுகிறான்.

அந்தச் சம்பவத்தை மறைப்பதாகக் கூறி, பெண்ணும் அவளைச் சார்ந்தவர்களும் ஆணின் சுயரூபத்தை வெளியிடாது விட்டாலும், விடயம் வதந்தியாகி அப்பெண் பாதிக்கப்பட ~ ஆண்தான் தப்பிக் கொள்கின்றானென்பதைப் பெண்ணைச் சார்ந்தோர் சிந்திக்க வேண்டும்.

ஒரு விஷ ஜந்து, இல்லையில்லை... வெறிநாய் இனங்காணப்பட்டுக் கொல்லப்படாவிட்டால் ஏற்படும் நிலைதான், சமூகத்திற்கு இவ்விடயத்திலும் ஏற்படும்.

இப்படிப்பட்டோரை இனங்கண்டு பகிஷ்கரிப்பது ஓர் இயக்கமாக முன்னெடுக்கப்பட வேண்டும். பெண்களைப் பொறுத்தவரை இப்படி முன்னின்று செயற்பட்டுத் துணிந்து போராடுவோர் எம்மிடையே இல்லை.

உதவிகளும் சேவைகளும் செய்யப்படுகின்றனவேயொழிய, இத்தகைய எழுச்சி கொண்டு இயங்கும் துணிவுள்ளோர் இருப்பதாகத் தெரியவில்லை.

சாதாரணமானவர்களால் இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்து வெற்றிபெற முடியாது.

ஆகவே, இதனைச் சாதிக்கக்கூடிய துணிவு கொண்டவர்களைத் திரட்டி நடவடிக்கை எடுக்காவிட்டால் மனித வடிவில் நடமாடும் இத்தகைய வெறிநாய்கள் பெருகிவிடும்.

அன்புடன்,
யோசி.

## அழகோடு ஆரோக்கியமும்

- இரவில் படுக்கைக்குச் செல்லும்போது உள்ளங்காலில் சிறிது நல்லெண்ணையைத் தடவி விடுங்கள். இது கண்ணுக்கும், தலைக்கும் குளிர்ச்சியைத் தரும்.
- இரவில் வெந்தயத்தை ஊறப்போட்டு, காலையில் அரைத்து, தலைக்குத் தேய்த்துக் குளித்தால் தலைமுடி மென்மையாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.
- கடலைமா, பயற்றமா ஆகிய இரண்டையும் கலந்து தலைக்குத் தேய்த்துக் குளித்தால் பொடுகுத் தொல்லை நீங்கும்.
- அவசரமாக வெளியில் செல்ல வேண்டி ஏற்படின், சுடுநீரினால் முகத்திற்கு ஆவி பிடித்தால் முகம் 'பளிச்' என்று இருக்கும்.
- படுக்கைக்குச் செல்லுமுன் கண் இமைகளில் சிறிதளவு ஆமணக்கெண்ணையைத் தடவி விடவும். இது கண்ணுக்கு மிகவும் நல்லது.
- பற்களில் கறை படிந்துள்ளதா? கவலை வேண்டாம். எலுமிச்சம் சாற்றில் சிறிதளவு உப்புக் கலந்து பல் விளக்கினால் பற்கள் வெண்மையாகும்.
- கால் நோ காரணமாக இரவில் தூக்கம் வராவிடில் உப்புக் கலந்த சுடுநீரினால் காலுக்கு ஒத்தணம் கொடுக்கலாம்.




# சமூகத்தை வழி நடாத்திச் செல்ல மகளிர் கல்வி அவசியமானது!

**ஆரோக்கியமான மனித சமுதாய உருவாக்கத்திற்கு மகளிர் கல்வி அவசியம். அது குடும்பத்திலுள்ள ஒவ்வொரு தாயிடமும் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்கிறார் திருமதி சண்முகநாதன் அருள்நங்கை. யாழ்ப்பாணத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமான நிறுவனத்தை நடாத்திவரும் அவருடனான நேர்காணல் இது.**



*கேள்வி:-* நீங்கள் நடாத்திவரும் புதிய உயர் கல்லூரியின் ஆரம்பம், அதன் செயற்பாடுகள் பற்றிச் சொல்லுங்கள்?

*பதில்:-* எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 16 வருடங்கள் ஆகிவிட்டன. ஆரம்ப காலத்தில் இங்கு மாணவர்களின் தொகை குறைவாக இருந்தாலும், கால ஓட்டத்தில் தற்போது வருடாந்தம் 150 மாணவர்களைப் பட்டதாரிகளாக உருவாக்கிக்கொண்டிருக்கின்றோம்.

இவர்கள் பேராதனை, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் பதிவுகளை மேற்கொண்டு இங்கு கற்கிறார்கள். தற்போது உயர் பட்டப்படிப்புக்கள் என்ற வகையில் முதுகலைமாணி, டிப்ளோமா, முதுவர்த்தகமாணி ஆகிய தகுதிகாண் பட்டங்களுக்கு அவர்களைத் தயாராக்குவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

*கேள்வி:-* தற்போது கல்விச் சீர்திருத்தங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அந்த வகையில் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான தகுதி என்ன?

*பதில்:-* உயர்தரத்தில் மூன்று பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்கள் 120 புள்ளிகள் பெற்றதுடன், பொது அறிவில் சித்தியடைந்திருந்தால் இங்கு பதிவுகளை மேற்கொண்டு பட்டப்படிப்பைத் தொடரலாம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பட்டப்படிப்பைத் தொடர உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் போதுமானது. ஆனால், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பட்டப்படிப்பை மேற்கொள்ள 180 புள்ளிகள் தேவை.

*கேள்வி:-* எண்பதுகளுக்கு முற்பட்ட காலங்களில் இருந்த மகளிர் கல்விக்கும், தற்போது உள்ள மகளிர் கல்விக்கும் இடையில் என்ன வேறுபாடுகளைக் காண்கிறீர்கள்?

*பதில்:-* தற்போது எமது நிறுவனத்தைப் பொறுத்தவரையிலும் சரி, வேறு எங்கென்றாலும் சரி - மகளிர்தான் கூடுதலாக கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஆனாலும், பொதுவாக உயர்கல்விக்கான முயற்சிகள் யாழ். மண்ணில் குறைவடைந்தே உள்ளன. அதற்குச் சில காரணங்கள் இருக்கலாம். வேலை வாய்ப்பு, பொருளாதாரத் தேவை ஆகியன கருதி வெளிநாடுகளுக்குச் சென்றமை, தொழிற்கல்வியில் சிலர் ஈடுபட்டுக் கொண்டமை போன்ற பல காரணங்களால் மாணவர்கள் தொடர்ந்து கற்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுள்ளனர்.

ஆனால், இவ்வாறான சூழ்நிலை நிலவியபோதும் பெண்கள் தளராத முயற்சியுடன் உயர்கல்வியைத் தொடர்கிறார்கள். மற்றும், இன்றைய சமூகத்தில் பெண்கள் - தாங்கள் உயர்பதவிகள், உயர் அந்தஸ்துகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மன உணர்வுகளுக்கு ஆட்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஆண்கள் இல்லாத வீட்டில் பெண்களே தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நோக்கில் செயற்பட்டு வருகின்ற நிலை இருக்கின்றபடியால், பெண்கள் கல்வியிலும் தம்மை உயர்த்திக்கொள்ள முனைகிறார்கள். அந்த வகையில் உயர்பட்டப்படிப்புகளில் கூடுதலாக பெண்களே தம்மை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். இதன்மூலம் பெண்கல்விக்கு ஒரு ஊக்குவிப்பு தற்போதைய சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

*கேள்வி:-* கடந்த 16 வருடங்களாக இவ்வாறான ஒரு நிறுவனத்தை இயக்குவதற்கான மனோதிடத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள்?

*பதில்:-* மனோதிடம் என்ற வகையில் எனக்கு இருந்த தன்னம்பிக்கைதான் இதற்குக் காரணம். நான் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய பின்னர் இரண்டு வருடங்கள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினேன். குறிப்பாக, களனிப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றினேன். அங்கு ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக அதாவது, நாட்டில் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் அங்கு வாழ முடியாதுபோகவே, எனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு இங்கு வந்து, தனியாக மாணவர்களைக் கல்விகற்பிக்க, தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் இணைந்து கொண்டேன். இதற்கான ஒரு வாய்ப்பும் கிடைத்தது. அ.குமாரவேல் அவர்கள் ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்தபோது, அங்கு முதன்முதலிலேயே பட்டப்படிப்புக்குப் கற்பிக்க ஆரம்பித்துவிட்டேன்.

அதன்பின்னர், இவ்வாறான பட்டதாரிகளை உருவாக்குவதில் எங்களுக்கும் தனியான ஒருபங்கு இருக்கின்றது என்ற வகையில் தனியார் கல்வி நிறுனம் ஒன்றை ஆரம்பித்து, ஆரம்பத்தில் க.பொ.த.உயர்தர வகுப்பிற்கும் கல்வி கற்பித்துக்கொண்டு வந்தேன். தற்போது பட்டப்படிப்புக்கள் வளர்ச்சியடைந்து வந்ததை அடுத்து, உயர்தரத்தைவிட்டு, பட்டப்படிப்பை நடத்துவதற்காக ஒரு நிறுவனத்தை உருவாக்கி, அந்த நிறுவனத்துக்கு உறுதுணையாக என்னுடைய கணவர் இயக்குநராக இருக்க, நான் அதை நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இருக்கின்றேன்.

*கேள்வி:-* மகளிருக்கான கட்டாயக்கல்வி பற்றி உங்கள் கருத்து என்ன?

*பதில்:-* கட்டாயம் மகளிருக்குக் கல்வி தேவை. குறிப்பாக, நான் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகப் போதித்து வருகின்றேன் என்ற வகையில், இந்து பாரம்பரியத்தின் அடிப்படையிலேயே வேதகாலம் எங்களுடைய ஆரம்பகாலம். அந்தக் காலத்திலேயே பெண்கள் வீட்டில் இருந்து கொண்டே கல்வி கற்றிருக்கிறார்கள். ஏனென்றால் - குடும்பம், சமூகம் என்ற இரண்டுநிலையில் பார்க்கின்றபோது, குடும்பத்திற்கு கல்வி அறிவுள்ள ஒரு பெண் என்ற வகையில் மகளிர் கல்வித் தேவை. வருங்காலச் சந்ததியை உருவாக்கக் கூடியவள் பெண்ணானபடியால் - அந்த சந்ததியினுடைய நிறைவான வளர்ச்சிக்கு, கல்வியறிவுள்ள ஒரு தாயால்தான் ஊக்கம்தரமுடியும்.

சமூகம் என்ற ரீதியில் - தொழில் என்ற அடிப்படையில் பார்க்கின்றபோது குறிப்பாக, ஆண்களால் செய்ய முடியாத சில தொழில்களில் பெண்கள் நிச்சயமாக ஈடுபடவேண்டிய ஒரு தேவை உருவாகுகிறது. குறிப்பாக, மருத்துவத் தொழில் அத்தகைய தொழில்களில் ஒன்று. பெண்கள் கூடுதலாகத் தொழில் புரிகின்ற இடத்தில் பெண் நிர்வாகி இருக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

பெண்களுக்குக் கல்வி கற்கவேண்டிய போதிய வசதி வாய்ப்புக்கள் ஏற்பட்டமையால் பெண்கள் இன்று அரசியல், விஞ்ஞானம், வைத்தியம் போன்ற எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கின்றார்கள் என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடியது.

ஆன்மீகத்துறையில்கூட ஆண்கள்தான் துறவோர்கள் என்ற நிலைமாறி, பெண்களும் ஆன்மீகத்துறையில் ஈடுபட்டுள்ளமைக்கு இந்தக் கல்வி அறிவும் ஒரு காரணம் என்றும் கூறலாம்.

*கேள்வி:-* ஆரோக்கியமான மனித சமூக உருவாக்கத்திற்கு மகளிர் கல்வி அவசியம் - அது குடும்பத்திலுள்ள ஒவ்வொரு தாயாலும் ஊட்டப்பட வேண்டியதே என்ற வகையில் உங்கள் கருத்து என்ன?

*பதில்:-* ஆசிரியர்களிடம் இருந்து பிள்ளை கற்கத் தொடங்குகிற காலம் குறிப்பாக, ஒரு அறிவு வந்த காலத்திற்குப் பிறகுதான் பிள்ளை எங்களைச் சந்திக்கிறது. ஆனால், தாயுடன் பிள்ளை வளருகின்ற காலம் நீண்டகாலம். குறிப்பிட்ட ஒரு நாளில் பெரும்பாலான நேரத்தைத் தாயுடன்தான் பிள்ளை செலவிடுகிறது.

இந்தநிலையில் தாய் ஒரு அறிவாளராகவும், அறிவை ஊட்டக் கூடியவராகவும் இருக்க வேண்டும். அங்கிருந்துதான் பிள்ளையின் கல்விக்கான அடிப்படை வளர்கிறது. பாடசாலையில் பிள்ளைகளுக்கு ஆசிரியரால் கொடுத்து விடப்படுகின்ற வீட்டு வேலைகளைக் கவனிக்கின்றநிலையில், வீட்டில் ஒரு தாய்தான் ஆசிரியராக இருக்க முடிகிறது.

பெண்கள் வீட்டிலிருந்து சமைப்பதும், சாப்பாடு பரிமாறுவதும் என்றநிலை இருக்கும்போது - சோம்பல் உருவாகிறது. இதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

குடும்ப நிர்வாகத்தைப் பொறுத்தளவில் - பொருளாதார ரீதியாகவும் சரி, வேறுவகையிலும் சரி - பெண்கள் கல்வி கற்றுத் தொழில் பார்ப்பதன் மூலமாகவே புரிந்துணர்வுடன் குடும்ப நிர்வாகத்தைச் சீராகச் செப்பனிட முடியும். இன்றைய பொருளாதாரத் தேவையும் அப்படியே இருக்கிறது. அதாவது - இருவரும் உழைக்க வேண்டும் என்ற அவசியமே நிலவுகிறது.

**நேர்காணல்: உஷா, கலானந்தி.**

# கவிதைச்சோலை

## வாழ்க்கை...

பதிப்புகள் பல கண்டு வரும்
பாடப்புத்தகம் அல்ல!
பிடித்த விதமாய் முடிவுகளை மாற்றி
சொந்தமாய் எழுதும் சிறுகதையும் அல்ல!
சிரிப்பும் அழுகையும் கலந்த
(மூன்று மணித்தியால) சினிமாப்படமும் அல்ல!
யதார்த்தத்தை உணரவைக்கும்
உண்மையே வாழ்க்கை!

## யார்?

நான் சந்தித்த மனிதங்களைச்
சிந்தித்தபோது....
ஒருவனின் உள்ளம் பேசுகின்றபோது
அவன் மனிதன்!
அவனின் உதடு பேசுகின்றபோது
அவன் மனிதன் மாதிரி!

## உன்னைப் பிரிந்த பின்...

உறவுகளின் பிரிவுநிலை இதுவரை என்
உதட்டோர வேதனைகளோடு
உட்கார்ந்து கொண்டது ~ ஆனால்
உன் பிரிவோ என்னை...
பரவாயில்லை
இனிமேலும் என் இதயம்
துன்பப்படாமல் இருப்பதற்காக
இனிச் சந்திக்கும் மனிதங்களோடு
தூரத்து உறவாகவே
வாழ்ந்து விடுவேன்!

கங்கா,
சுண்டிக்குளி.

## இன்னொருவனுக்கு...

இப்பொழுதும் என்னை
நினைத்துக் கொண்டுதான்
இருக்கிறாயா?

'மறந்துவிடு' என்று
உனக்கு,
நான் சொல்ல முடியாதுதான்
இருந்தாலும்
பொருந்தாத வேஷங்கள்
வாழ்க்கையில் எதற்காக?

நீயும் நானுமாய்
நடந்த வெளிகளில்
இன்று,
கட்டடங்கள் அரைகுறையாய்...
சூழவும் மணல்
தடங்களுடன்

'அவனதும் என்னதும்'
உனக்கு நினைவிருக்கிறதா?
அந்த மஞ்சள் மலர்கள்.....
இப்பொழுதும்,
மரம் நிறைய,
தரை நிறைய
மஞ்சள் தான்

மற்றபடி, இங்கு
எல்லாமே படுமோசம்!
இன்று,
இவனருகில்
மணல் வெளியில்
திரிதலில்
ஏனோ உன்முகம்
நினைவுக்கு வருகிறது,
அடிக்கடி,
ஒரு புரியாத புத்தகத்தைப்
படிக்க விரும்புகிற
குழந்தையின்
முகம் போல....

- ஊர்வசி.

## கோபமும் தாபமும்

சிலநேரம் சிந்தனைகள் தடைப்படலாம்
சிரிப்பவர்க்கு இரையாக அவை மாறலாம்
சொல்லாமல் கொள்ளாமல் நான் மாறலாம்
சொர்க்கத்தின் கதவைக்காண ஓடிவரலாம்.

பள்ளத்தைத் தேடி நீர் ஓடிவரலாம்
பாறையும் அங்கு தென்படலாம்
தடைப்பட்ட நீரின் கோபம் சில நேரமே
அடைபட்டு நீரங்கு நிற்பதில்லை

தாயின் நிலை தெரியாமல் குழந்தை அழலாம்
கோபத்தில் தாய் அதை அடித்து விடலாம்
தவறான செய்கையிலே தாய் வருந்தலாம்
மாறாத அன்பு கொண்டு மார்பில் அணைக்கலாம்

சிலநேரத் தடைக்கற்கள் இவைகளல்லவோ
சிந்தனையை தேக்கி வைத்து மானிடார்க்குமோ
உன்னின் நிலைமையை யாரறிவார்
யானறிவேன் என்கோபம் சிறுநேரமே!

- தர்சினி.

## மலர்ந்து விட்ட புத்தாண்டே!

காலத்தினைக் கனியாக்கி
காவியமாய் வந்தவளே
களமாடிக் கரைசேர்த்த
மறவர்கள் வந்திட்டார்.
உவப்புடனே நீ வருக
எமதுள்ளம் குளிர்விக்க.
மலர்ந்துவிட்ட புத்தாண்டே
உன்வரவால் இங்கே
பூகம்பம் ஒன்று
வெடித்துச் சிதறுது.
எக்காளமிடுகிறது
ஈழமண் என்று
எரிதலும் சிலரில் மூளாமலில்லை.
இது செங்குருதி பாய்ந்த
சிவந்த மண்.
வற்றிப்போன மனங்களுடன்
வளைய வந்தது
தாயகப் பசிமறந்தல்ல
தமிழன்னை
நிலை உணர்ந்தே
உதித்திட்ட புத்தாண்டே
வெளி ~ நாடுகளின்
நிழற்பரப்பில்
சமையப்போகும்
சமாதானத்தினையும்
உன்னுடன்
அழைத்து வா...

சி.நளாயினி
நீர்வையூராள்.

## FROCK (சட்டை)



*தேவையான பொருட்கள்*

- கேக்
- ஐசிங் சுகர்
- மாஜரின்
- கலரிங்
- சுடுநீர்

*செய்முறை:*

சட்டை உருவில் ஐசிங் செய்வதாயின் - வளையாததும் உறுதியானதுமான ஒரு Boardஇல் கேக்கினை திருப்பிப் போடவும். பின் சட்டை Cutting வைத்துக் கத்தியைச் செங்குத்தாகப் பிடித்து வெட்ட வேண்டும். பின் சுடுநீர் கொண்டு அழுத்தும் கத்தியால் கேக்கின் தூள்களை அகற்றிய பின், கேக்கின் எல்லாப் பாகங்களிற்கும் கேக்கின் தூள் அமரும் வண்ணம் smoothing செய்யவும். பின்னர் கிறீமாக அடித்த மாஜரினைக் கேக்கின் எல்லாப் பாகங்களிற்கும் பூசவும். சட்டையின் கழுத்துப் பகுதிக்கும், கீழ்ப்பகுதிக்கும் ஸ்கலப்பாக எடுத்து, pink கலர் Soft Butter Icing குழைத்து Star நொசலிங்கால் போடவும். பின் நடு நெஞ்சுப் பகுதிக்கு நீலக்கலரால் Star போடலாம். பிரித்த இருகரைகளுக்கும் Butter கலரால் போடலாம். கைகளிரண்டுக்கும் நீலக்கலர் Soft Butter குழைத்து basket நொசலிங்கால் போடவும். சட்டையின் கீழ் உடம்பிற்கு இடையிடையே ஸ்கலப்பிற்கு நீலக் கலரிங்கால் Star போடவும். மேல்விளிம்பிற்கு விரும்பிய கலரில் Star நொசலிங்கால் போடவும். கீழ் விளிம்பிற்கு நீலக் கலர் Star போடவும். Rose செய்து வைப்பதாயின் கேக்கின் இடது மூலையில் அல்லது Boardஇல் வைக்கலாம். Board இல் பிறந்த திகதி, பெயர் என்பவற்றைப் போடலாம். இக்கேக்கானது 10 வயதிற்குட்பட்ட சிறுமியருக்குப் போடலாம். சட்டையின் தெறிக்குப் பதிலாக உண்மையான தெறியையும் வைக்கலாம்.

## வட்டிலப்பம்

*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| கித்துள் அல்லது சர்க்கரை | - 1/2 Kg |
| தேங்காய்ப்பால் | - 1 கப் (பாதித் தேங்காய்) |
| முட்டை | - 4 |
| Corn Flower | - 1 மேசைக்கரண்டி |
| பால்மா | - 1 மேசைக்கரண்டி |
| மாஜரின் | - 1 மேசைக்கரண்டி |
| பிளம்ஸ் | - 25 g |
| கஜு | - 25 g |
| ஏலப்பொடி | - 1 மேசைக்கரண்டி |

*செய்முறை:*



பாதித்தேங்காயைத் துருவி தண்ணீர் சேர்த்துப் பிழிந்து 1 கப் - பால் எடுத்துக் கொள்ளவும். கித்துள் அல்லது சர்க்கரையைச் சிறுசிறு துண்டுகளாகச் சீவி Corn Flower, பால்மா என்பவற்றைச் சேர்த்து தேங்காய்ப் பாலில் கரைத்துக் கொள்ளவும். பின் முட்டையை ஒரு பாத்திரத்தில் ஊற்றி நன்றாக அடித்துக் கொள்ளவும். முதல் கரைத்து வைத்திருக்கும் கலவையினுள் ஊற்றி நீராவியில் அவித்தெடுக்கவும். வட்டிலப்பத்தைப் பரிமாறும்போது ஐஸ்கிறீம் எடுக்கும் கரண்டியால் எடுத்து ஐஸ்கிறீம் பரிமாறுவதுபோல் பரிமாறலாம். குளிரூட்டியும் பரிமாறலாம். தேவை ஏற்பட்டால் Corn Flower அல்லது பால்மா அல்லது அரிசிமா சேர்த்துக் கொள்ளலாம்.

# நாம் அழகாய் இருக்க சில அழகுக் குறிப்புகள்

## கால்களைச் சுத்தம் செய்தல் (PEDICURE)

திருமதி.யோகினி சண்முகநாதன்









Pedicure என்பது கால்களைச் சுத்தம் செய்து அழகாகத் தோற்றமளிக்கச் செய்யும் முறையாகும். முகத்தை அழகுபடுத்திக் கொள்வது எவ்வளவு முக்கியமோ, அதேபோல் கால்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வதும் முக்கியம். முக்கியமாகக் கால்கள்தான் உடலைத் தாங்கிக் கொள்கின்றன. இதனால்தான் கால்கள் விரைவாகப் பலவீனம் அடைகின்றன. ஆகையால் கால்களில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். நாம் நடக்கும்போது தரைக்கும் கால்களுக்கும் தொடர்பு அதிகமாக இருப்பதால், கால் பாதங்களில் கூடுதலான அழுக்குகள் படியக்கூடும். இதனால், கால்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு கூடுதலாகப் பாதிப்புக்கள் ஏற்படும். சிலருக்கு நடக்கவே முடியாமல் வேதனையும் கஷ்டமும் ஏற்படும். நகங்களில் அழுக்குச் சேர்ந்து 'நகங்களைப் பாதிக்கக்கூடும். இதனால் சிலருக்குக் கால்கள் பார்க்க அருவெறுப்பாகத் தோன்றும். இவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு இந்த Pedicure முறை மிகவும் உதவுகின்றது.

*செய்முறை:-* முதலில் கால் நகங்களை நகப் பொலிஷ் ரிமூவரினால் சுத்தம் செய்யவேண்டும். பின் ஒரு பேசினில் மிதமான வெந்நீர் எடுத்து, அதில் உப்புத்தூள் ஒரு மேசைக்கரண்டி, டெட்டோல் 4 துளிகள், ஹைட்ரஜன் பரொக்ஸைட் ஒரு மேசைக்கரண்டி, சோப் அல்லது ஷம்போ சிறிது, எலுமிச்சைச்சாறு கொஞ்சம் விட்டுக் கால்களை கணுக்கால்கள் மூழ்கும்வரை வெந்நீருக்குள் வைத்து, சிறிது நேரம் ஊறவிடவும் (அவரவர் கால்களைப் பொறுத்து). அப்படியே - கால்களையும் விரல்களையும் பிரஷ் மூலம் தேய்த்துச் சுத்தம் செய்து கொள்ளவும். பின் கால்களை Metal Scraper மூலம் File பண்ணிச் சுத்தம் செய்து கொள்ளவும். பின் கால்களை வெளியில் எடுத்துத் துடைத்து நகங்களை நேராக வெட்டிக்கொள்ளவும். கால் நகங்கள் வெட்டுவதற்கென இருக்கும் கட்டர் மூலம் வெட்டுவது மிகவும் இலகுவாக இருக்கும். பின் Dirt Remover மூலம் நக ஓரங்களில் உள்ள அழுக்குகளை எடுத்துச் சுத்தமசெய்து கொள்ளவும். பின் Cutical Cream நகங்களில் பூசி இரண்டு நிமிடங்கள் ஊறவிட்டு, Cutical Pusher மூலம் Cuticals ஐ பின்புறமாகத் தள்ளி Dead Cells இருந்தால் வெட்டிக் கொள்ளவும். பின் கால்களைத் திரும்பவும் சிறிது வெந்நீரில் சுத்தம் செய்துகொண்டு ஒரு துணி மூலம் நகங்களில் எண்ணெய்ப் பசை இல்லாமல் நன்றாகத் துடைத்துக் கொள்ளவும். பின் கைகளுக்கு நகப் பொலிஷ் பூசுவதுபோலவே கால்களுக்கும் பூசிக்கொள்ள வேண்டும். ஆனால், கால்களுக்கு நகப் பொலிஷ் பூசும்போது கால் விரலிடுக்குகளில் பஞ்சைச்சிறு உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் ஒரு விரலிலுள்ள நகப்பொலிஷ் மற்றொரு விரலில் ஒட்டாமல் இருக்கும். இப்படிச் சுத்தஞ்செய்து கொள்ளும் கால்கள் பார்க்க மிகவும் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயன்இலாச் சொல்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## காலஎல்லைகள்! கவனம்!!

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி, அவர்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கான, கட்டங்கட்டமான முயற்சிகளை உள்ளடக்கிய திட்டவரைபொன்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளனர்.

இதன்படி - இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவிருக்கும் மீள்குடியமர்வு நடவடிக்கைகளினூடாக - இந்தப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்படி, அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே, இராணுவத்தினர் தாம் தங்கியிருக்கும் பொதுமக்களின் வீடுகள் மற்றும் கட்டடங்களிலிருந்து- குறிக்கப்பட்ட காலவரையறைக்குள் வெளியேறிவிடுவரென தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் - யாழ்.மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதியில், இராணுவப் பிரசன்னம் இழிவடைவதுடன் - அப்பகுதிகளில் சுமுக வாழ்வுக்கும் வழியேற்பட முடியும் என எதிர்பார்க்கலாம்.

இந்தக் கட்டம் செம்மையுறப் பூர்த்தி செய்யப்பட்டதும் - உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு பற்றிய அடுத்த கட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு - சர்வதேச இராணுவ நிபுணர்களின் ஆலோசனையும், வழிப்படுத்தலும் பெறப்படவுள்ளது.

இந்த இரு கட்டங்களினூடாகவும் மீளகுடியமர்வை, சொல்லியபடி செயலில் காட்டும்பட்சத்திலேயே - இணக்கம் காணப்பட்ட திட்டவரைபு முழுமைபெறும் என்பது திண்ணம்.

தாய்லாந்துப் பேச்சுக்களினூடாக இம்முறை பிரேரிக்கப்பட்ட திட்டவரைபில் - முதலாம் கட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய கால எல்லைகள் அழுத்தந் திருத்தமாகக் குறிக்கப்பட்டுள்ள நிலையில் - அக்கால எல்லைகளுக்குள்ளான இலக்குகளை அவசியம் நிறைவேற்றியே தீரவேண்டிய கடமைப்பாடு அராசாங்கத்திடம் விடப்பட்டுள்ளது.

இந்த இலக்குகள் நிறைவேற்றப்பட்டு, முதற்கட்டம் பூர்த்தியாக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு- தமிழ் மக்களிடம் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் வியாபித்து, நிற்பது அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கான கண்காணிப்பைத் தருவதாகவே அமைகின்றது,

அதேவேளை - இந்தமுறை தாய்லாந்துப் பேச்சுக்களில் - உயர்பாதுகாப்பு வலய விவகாரமும் மக்களது மீள்குடியேற்றமும் - பேச்சுக்களின்போதான கடுமையை ஏற்படுத்தியிருந்ததும் அரசாங்கத்துக்கு ஒரு முன்னெச்சரிக்கையாகும்.

இந்த வகையில் - தமிழ் மக்களின் சுமுக வாழ்வில் விடுதலைப் புலிகள் கொண்டுள்ள தீவிர நிலைப்பாடும், இந்தமுறை பேச்சுக்களில் அரசாங்கத்தினால் மிகச் சரியாகப் புரிந்துகொள்ள வைக்கப்பட்டுள்ளதால் - 'பாதுகாப்பு உபகுழு அனுபவத்தை' மீளவும் பெற அரசாங்கம் முயலாது என நம்பலாம்.

போரின் தாக்கங்களை அகற்றி, மக்களது புனர்வாழ்வுக்கும், புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் வழி செய்யாமல் - அடுத்த கட்டங்களுக்கு நகர முடியாது என விடுதலைப் புலிகள் காட்டிய உறுதிப்பாடும் -

அரசாங்கத்தை, வாக்குறுதியளித்தபடி செயற்பட வைக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனாலேயே - இம்முறை 'அரசியல் விவகாரங்கள்' அரசாங்கத்தரப்பினால் சற்றே அடக்கி வாசிக்கப்பட்டதையும் காணமுடிந்தது.

அடுத்து வரும் மாதாந்தச் சந்திப்பிற்கு முன்னராக - தனது முதற்கட்ட நடவடிக்கைகளை வெளிப்படுத்தவேண்டிய அழுத்தத்தை அரசாங்கத்திற்கு விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியிருப்பதும் இந்த வகையில் கவனத்திற்குரியதே.

எனவே - தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்திற்கும் மீள்குடியேற்றம் பற்றிய முன்னேற்றத்தைக் காட்டவேண்டிய, அமைதி மீதான ஆர்வத்தை உறுதிப்படுத்தவேண்டிய முக்கிய கட்டத்திற்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது என்றே கூறலாம். அரசாங்கத்தின் பதிற் செயற்பாடுகளிலேயே இனி அனைத்தும் தங்கி நிற்கின்றது.

---

**உயர்பாதுகாப்பு வலய விவகாரம்**

# அறிக்கை சமர்ப்பிக்கும் குழுவுக்கு சதீஸ் நம்பியாரே தலைவராம்!

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து மீள்குடியமர்வு தொடர்பான அறிக்கையைத் தயார் செய்ய - சர்வதேச ரீதியாக அமைக்கப்பட்ட குழுவிற்கு, இந்திய இராணுவ அதிகாரி லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முப்படைகளும் அங்கம் வகிக்கும், இணைந்த சேவைகள் நிறுவனத்தின் தலைவராக உள்ள சதீஸ் நம்பியார், இந்திய இராணுவத்தின் முன்னாள் பிரதித்தலைமை அதிகாரி ஆவார். அத்துடன், இந்திய இராணுவத்தின் நடவடிக்கைக் கட்டளை அதிகாரியாகவும் இருந்தார்.

1993 இல் யூகோஸ்லாவியாவுக்கு அனுப்பப்பட்ட ஐ.நா.சமாதானப்படையின் தளபதியாக இருந்த இவர், நேட்டோவுடனான முரண்பாட்டினைத் தொடர்ந்து தனது பதவியை ராஜினாமாச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடன் பிரித்தானிய அதிகாரி மைக்கல் றோஸ"ம் திட்டவரைபுக் குழுவில் இடம்பெற்றுள்ளார்.

---

# நுளம்புகள் பெருக உதவும் யாழ். நகரிலுள்ள குளங்கள்!

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

அதிக நோய்க்காவிகளை உற்பத்தி செய்யும் இடங்களாக, யாழ்.நகரின் நீர்நிலைகள் மாறி வருவதாகச் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை செய்துள்ளனர். தற்போது யாழ்ப்பாணத்தை அச்சுறுத்தும் வைரஸ் காய்ச்சலுக்கு அவற்றின் பங்கு அதிகளவு உள்ளதென இவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நகரின் மத்தியில் அமைந்துள்ள ஆரியகுளம், புல்லுக்குளம், ஸ்ரான்லி வீதியில் வின்சர் தியேட்டர் சந்திக்குமுன் அமைந்துள்ள குளம், கழிவு நீர் வாய்க்கால்கள் என்பவற்றில் தற்பொழுது நீர் தெரியாவண்ணம் ஆகாயத்தாமரை (சல்வேனியா) அதிகளவு படர்ந்துள்ளது.

இவை நுளம்புகளின் வாழ்விடமாகவும் அவற்றின் பெருக்கத்திற்கும் நன்கு வழியமைத்துக் கொடுத்துள்ளன. இதனால், தற்பொழுது நகர்ப்பகுதியில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரியகுளம் மற்றும் பகுதிகளில் பரவும் சல்வேனியா தாவரத்தினை மாநகரசபையே கடந்த காலங்களில் அகறறி வந்துள்ளது. தற்பொழுது, அது தொடர்பாக மாநகரசபை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நுளம்புகள் பெருகுவதற்கு அதிக வாய்ப்புகள் உருவாகியுள்ளன. (13)

---

# தர்மக்கேணிப் பாடசாலை மீண்டும் பழைய இடத்தில்

(பளை)

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர், சோரன்பற்று கணேச வித்தியாலயத்துடன் இணைந்து இயங்கிவந்த தர்மக்கேணி அ.த.க. பாடசாலை, மீண்டும் தர்மக்கேணியில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் இயங்கிவருகிறது.

முற்றாக அழிந்துபோயுள்ள இப்பாடசாலைக்கு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், 60 அடி நீளமான தற்காலிகக கொட்டகை அமைத்துக் கொடுத்துள்ளது. இத் தற்காலிக வகுப்பறையிலேயே பாடசாலை இயங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (115)

---

# நாடாளுமன்றத்தை நிறுத்திய 'திடீர் மின்சாரத் தடை'

(கொழும்பு நிருபர்)

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் முதற்தடவையாக - நாடாளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீர் மின்தடை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கூட்டம் ஆரம்பமாகிய சற்று நேரத்தில் இந்த மின்சாரத்தடை ஏற்பட்டது. காலை 10.10 மணியளவில் ஏற்பட்ட இம் மின்தடை சுமார் 40 நிமிடங்கள் வரை நீடித்தது.

இதனால், நாடாளுமன்றக் கூட்டம் இடைநிறுத்தப்பட்டது. நாடாளுமன்ற வராலாற்றில் இவ்வாறு மின்தடையால் கூட்டம் ஒருபோதும் நிறுத்தப்படவில்லை எனவும், இது குறித்து அரசாங்கம் விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

# நுண்கலைப் பீடத்துக்குத் தெரிவான மாணவர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் **2002/**2003 கல்வியாண்டில் கற்கைநெறிகளைத் தொடர விண்ணப்பித்து, நேர்முகப் பரீட்சையில் தோற்றித் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விபரங்கள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

**தெரிவானோர்களின் விபரங்கள்-**

*பண்ணிசை*-என்.அனுஷியா, கே.கவிதா, என்.நிரஞ்சனி, கே.கபிலன், பீ.ரஜனிதேவி, கே.சுரேகிரிதா, எல்.சிவரஞ்சினி, கே.நிதர்சினி, ரீ.சுஜந்தினி, கே.கஜனி, ரீ.ஜெயதர்ஷினி, ரீ.உஷாந்திலா, வீ.தனரூபி, கே.மெலோனி, எம்.சுஜந்தினி, கே.கலைச்செல்வி, கே.சுசீலா, எஸ்.மரீன் பாமினி, ரீ.சிவசோபனா, ஜீ.ஜெமின் சர்மிளா, எஸ்.செல்வரஞ்சினி, என்.சுமங்கலி, ஏ.ஆரூரன், எஸ். சாந்திமலர், எஸ்.ஜமுனாதேவி, ரீ.கேதீஸ்வரி, ஆர்.சரிதா.

**சித்திரமும் வடிவமைப்பும் -**

ஆர்.அபிதா, ரீ.அனற் கார்லின், எம்.அனுஜன், ஏ.அருள் சஞ்ஜீத், பி.பிரவீணா, பி.ஞனேந்திரன், எஸ்.ஜெகன், ரீ.ஜெற்மில்ரன், எஸ்.ஜெயானந்தன், ரீ.கபெஸ், சீ.கஜந்தன், ஆர்.கஜேந்திரா, வீ.ககுந்தன், எஸ்.கமலதீபன், வை.காங்கேசராஜா, டீ.கருணாகரன், எஸ்.கஸ்தூரி, எஸ்.கவிதாசன், என்.கேதீஸ்வரன், ஏ.மயூரன், எஸ்.மோகனராஜ், கே.முகுந்தன், ரீ.முருகதாஸன், என்.நவனேசன், ரீ.நிரூஜா, எஸ்.நிரூபராஜ், கே.நிதாகரன், ஏ.பிலிப் றோய், என்.பிரசாந்தன், பீ.பிரசாத், கே.பிரசாத், ஜே.பிரதீபன், ஆர்.புஸ்பராஜா, பீ.ராகுலன், என்.ரஞ்சித்குமார், ஏ.சிறீகரன், ஆர்.சுகந்தன், பீ.சுஜீப்குமார், வீ.சுமன்ராஜ், எஸ்.சுரேந்தர், ரீ.தர்மீகன், என்.தயாபரன், ரீ.திவ்யா, ஜே.தோமஸ் சிம்சன், ஆர்.உதயராஜ், எஸ்.வத்சலா, எஸ்.விஜிதன், ஆர். வினோதராஜ், ரீ.துஷியந்தினி, ரீ.சக்திவேல்.

*மிகுதி நாளை தொடரும்...*

---



# குறைதீர் மன்றம்

போர் நடவடிக்கைகளினால் சொத்து இழப்பிற்குட்பட்ட ஓய்வூதியர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவின்போது - அதிகாரிகள் நேரே சென்று மதிப்பிட்ட மொத்தப் பெறுமதியின் 20% மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், தற்பொழுது பாரியளவு நிதி - புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென ஒதுககப்படுவதால், ஓய்வூதியர்கள் நட்டஈட்டினை முழுமையாகப் பெற ஆவன செய்யப்படுமா?

**க.பொன்னையா**
**(ஓய்வூதியர்)**
**சுன்னாகம்.**

**நமது ஈழநாடு**

தங்களது விடயம் தொடர்பாக நாம், யாழ். மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளோம். இந்தவகையில், ஓய்வூதியர்கள் தங்கள் நலன்புரிச் சங்கங்கள் மூலமாக மேற்படி விடயத்தினை அறிக்கை செய்து அனுப்பிவைத்தால், புனர்வாழ்வு அமைச்சினதும், அமைச்சரினதும் கவனத்திற்கும் உடனடியாகக் கொண்டுவந்து நட்டஈட்டின் முழுத்தொகையினையும் பெற வாய்ப்புக்களை உருவாகலாம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# போரின் அழுத்தங்கள் குறைந்ததால் மக்களிடம் மகிழ்ச்சி நிலைகொண்டது!

*கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய அருட்தந்தை ஜே.பி.அன்ரனிதாஸ் (பங்குத் தந்தை) **Bachelor Of Theology (Roman Degree)** அவர்களோடு ஒரு நேர்காணல்.*

*கேள்வி*: தங்களது இறைபணி வாழ்க்கையைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

*பதில்*: என்னுடைய பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு 3 ஆண்டுகள் ஒரு மின்சாரப் பொறியியல் ஸ்தாபனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அக்காலகட்டத்தல்தான் கிறிஸ்துவின் அழைப்பை உணர்ந்து, 1981ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி யாழ்.புனித மடத்தின் குரு மடத்தில் சேர்ந்து கல்விகற்று, அதே ஆண்டு புரட்டாதி மாதம் யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் பெரிய குருமடத்தில் சேர்ந்து கொண்டேன்.

அங்கு மெய்யியல், இறையியல் கல்வியைக் கற்றுத் தேறியபின் 1989 ஆம் ஆண்டு ஆனி மாதம் 19 ஆம் திகதி ஓய்வுபெற்று, இளைப்பாறிக் கொண்டிருக்கும் யாழ்.மறை மாவட்ட முன்னாள் ஆயர் பேரருட் திரு. வ.தியோகுபிள்ளை அடிகளாரினால், வேறு 6 அருட்தந்தையர்களுடன் குருவாக திருநிலைபடுத்தப்பட்டேன். தொடர்ந்து - கிளிநொச்சிப் பங்கிலும், மாரீசன்கூடல் பங்கிலும் ஒன்றரை ஆண்டுகள் உதவிப் பங்குக் குருவாகப் பணியாற்றிய பின் நெடுந்தீவு, உரும்பிராய் பங்குகளில் பங்குத்தந்தையாக 5 ஆண்டுகளும், தொடர்ந்து 1995 இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின் விளைவாக நான் கிளி. - முல்லை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநராக மூன்று ஆணடுகள் பணிபுரிந்து கொண்டு இருந்தேன்.

அக்காலத்தில் எமது யாழ். மறைமாவட்டப் பெரிய குருமடமும் இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் இயங்கிக்கொண்டிருந்தபோது, நானும் மூன்று அருட்தந்தையர்களும் ஒன்றாக இணைந்து இறையியலில் முதுமாணிப் பட்டம் (B/Th Rome) பெற்றுக் கொண்டோம். பின்னர் இரணைப்பாலையில் 2 ஆண்டுகள் பங்குத் தந்தையாகவும் பின்னர், ஓர் ஆண்டு மீண்டும் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநராகவும் பணியாற்றினேன். பின், உயர்கல்விக்காகப் பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அத்தனேயு பல்கலைக்கழகத்தில் இயங்கும் EAPI என்னும் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று, நாடு திரும்பியபின், என்னுடைய ஆயரின் பணிப்புரையின்படி கரவெட்டிப் பங்கின் பங்குத்தந்தையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எனது சொந்த இடம் யாழ். மண்டைதீவு என்று கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

*கேள்வி*: சமய சமூகப் பணிகளோடு நீங்கள் கல்வித்துறைக்கு ஆற்றிய பணிகளைக் கூறுவீர்களா?

*பதில்*: எனது ஆரம்பகாலக் குருத்துவ பணிவாழ்வு இறை அரசின் போதகப் பணியோடு மட்டும் நின்றுவிடாமல், இப்போதகப் பணிக்கு உயிரூட்டம் கொடுப்பதுபோல - இன, மதப் பாகுபாடுகள் இன்றி யுத்தகாலத்தில் தங்கள் கல்வியைத் தொடர முடியாது, வாழ்ந்து கொண்டிருந்த அனைத்துச் சிறுவர்கள், இடம்




பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் கல்விச்சேவையில் எமது யாழ். மறைமாவட்டத்தின் கியூடெக் ஸ்தாபனம் ஊடாகப் பல தரப்பட்ட பணிகளைச் செய்து கொண்டிருந்தோம்.

பாடசாலைகளுக்குத் தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள் போதியளவு இல்லாதபோது, மாணவர்கள் மரங்களின் கீழ் மண்ணிலும், பாயிலும், இலையிலும், குழையிலுமிருந்து கல்வி கற்றபொழுது, எம்மாலான முறையில் தற்காலிக பாடசாலைகள் அமைத்தும், தளபாடங்கள் செய்தும் கொடுத்தோம்.

பாடசாலைச் சீருடைகள், உபகரணங்கள் வழங்கியும் குறிப்பாகப் பசியோடு வரும் மாணவர்களுக்கு இலைக் கஞ்சி கொடுத்தும், ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபொழுது தொண்டர் ஆசிரியர்களை நியமித்தும் கல்வித்துறையில் எமது பணிகளைச் செய்து கொண்டிருந்தோம்.

இக்காலப்பகுதியில் எனக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் காலஞ்சென்ற அருட்தந்தை ஜெபநேசன், தற்போதைய கியூடெக் இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

*கேள்வி*: பல ஏழைச்சிறார்களும் பெற்றோரை இழந்த சிறார்களும் தங்களது திருச்சபையில் வளர்ந்து வருகிறார்கள். அவர்களின் எதிர்காலம் குறித்து தங்களின் கருத்து என்ன?

*பதில்*: இப்படிப்பட்ட ஏழைச்சிறார்கள் திருச்சபையில் வளர்ந்து வருகிறார்கள் என்று சொல்வதைக் காட்டிலும் - எமது சொந்த மண்ணில் வளர்ந்து வருகிறார்கள் என்று சொல்வது சிறந்தது. கடந்த 20 வருடகாலப் போர் அனர்த்தங்களால் ஏற்பட்ட ஒரு துர்ப்பாக்கியநிலை என்றும் இதைச் சொல்லலாம்.

இன்றை உலகில் நாம் காணும் கத்தோலிக்கத் திருச்சபை எல்லோருக்கும் பொதுவானது. அது சாதி, மத, இன, நிற, மொழிப்பாகுபாடுகளுக்கப்பால் சென்று எல்லோரையும் அரவணைத்து வாழ்வு கொடுக்கும் ஒரு தாயாகப் பணிபுரிகிறது.

இதன் பொதுப் பணி வாழ்வின் அடிப்படையில், எமது யாழ். மறை மாவட்டத்தில் மனித முன்னேற்ற நடுநிலையம் கியூடெக் என்ற பெயரில் எல்லோருக்கும் தாய்க்குரிய அன்புடன் நிவாரணப் பணிகளைச் செய்துவருகிறது.

எனவே, இந்த ஸ்தாபனம் இது போன்ற ஏழைச் சிறுவர்கள், பெற்றோர்களை இழந்து அநாதையாக்கப்பட்டவர்கள் மேல் கருணை கொண்டு தாய்க்குரிய அன்புடன் நிச்சயமாக இவர்களின் எதிர்கால வாழ்வு முன்னேற அனைத்து ஆக்கப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்லும். உதாரணமாக, தை பிறந்தால் இது போன்ற மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், சீருடைகள் கொடுத்து, அவர்களின் பசியாற்ற இலைக்கஞ்சி வழங்கிப் பணியாற்றுகிறது. அத்தோடு, பாதிக்கப்பட்டுக் கல்வி பயில முடியாமல் இருக்கின்ற, உயர்கல்வி மாணவர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்துவருகிறது. இது போன்ற ஏழைச் சிறார்களுக்கு பல அநாதை இல்லங்களையும் அமைத்து, அவர்களின் துயர் துடைத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

*கேள்வி*: கடந்த பல வருட யுத்த சூழ்நிலையில் சந்தித்த நத்தார் புதுவருட நிகழ்வுகளுக்கும், தற்போது நடைபெற்ற நத்தார் புதுவருட நிகழ்வுகளுக்கும் இடையில் என்ன வேறுபாடுகள் காண்கிறீர்கள்?

*பதில்*: பொதுவாகவே நத்தார் திருவிழா அல்லது கிறிஸ்மஸ் திருவிழா என்பது பெரும் மகிழ்ச்சியின் விழா. இதை ஒரு சமாதானத்தின் பெருவிழா என்றும் நாம் கூறுவோம். இயேசு பிறந்த காலம் பலவிதமான மனித அடிமைத்தனங்கள், அடக்குமுறைகள், மத, இன, சாதி வெறி தாண்டவமாடிய காலம், பலவிதமான பாவ அடிமைத்தனங்கள் நிறைந்த காலம்.

இந்த வேளையில், மனுக்குலம் எதிர்பார்த்த ஒரு மெசியாவாக, இரட்சகராக, முழுமனித விடுதலை கொடுக்கின்ற ஒருவராகச் சாதி, மத, இன வேறுபாடுகளைக்களைந்து, எல்லோருக்கும் வாழ்வு கொடுக்கின்ற ஒருவராக, ஒரு ஏழை வடிவிலே மாட்டுக்குடிலில் பிறந்தவர்தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

தம்முடைய பிறப்பின் வழி மனுக் குலத்துக்குக் கொண்டு வந்தது அன்பு, மகிழ்ச்சி, சமாதானம். இயேசு பிறந்த பொழுது தேவதூதர்கள் பாடிய சுபமங்களம் 'உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும், பூவுலகில் அவர் தயவு பெற்றோருக்கு அமைதியும் உண்டாகுக" என்பதே. இதன்படி இந்தப் பிறப்பின் செய்தி, முதன்முதல் அறிவிக்கப்பட்டது சமுதாயத்தில் வெறுத்து ஒதுக்கப்பட்ட இனமாக வாழ்ந்த இடையர்களுக்கே.



அருட்தந்தை ஜே.பி.அன்ரனிதாஸ்

எனவே, அன்று ஒலித்த இக்கீதம் இன்று நாம் வாழுகின்ற காலப் பகுதியில் பாடப்படுகின்றபோது, நாமும் சமாதானத்தின் தூதுவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணரப்பண்ணவே. எனவேதான் இப்பெருவிழா ஒரு மகிழ்ச்சியின் பெருவிழா என நாம் கருதுகிறோம்.

கடந்த பல வருடங்களாக ஏ-9 பாதை உட்படப் பல பாதைகள் மூடப்பட்டு இருந்தாலும், பல பாதைகளிலே இராணுவக் காவலரண்கள், வேலிகள் போடப்பட்டு இருந்ததாலும், பொருளாதாரத் தடைகள் அமுலில் இருந்தாலும் இம்மகிழ்ச்சியின் விழாவை மக்களால் மகிழ்வோடு கொண்டாட முடியாமல் போயிற்று.

ஆனால், தற்போது தோன்றியுள்ள சமாதானச் சூழலில் ஏ-9 பாதை உட்படப் பல பாதைகள் திறக்கப்பட்டும், பல இராணுவ முகாம்கள், வேலிகள், காவலரண்கள் அகற்றப்பட்டும் பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டும் இருப்பதனாலும், இடம் பெயர்ந்த பெரும்பான்மையான மக்கள் தங்கள் இல்லிடங்களுக்கு வந்து இருப்பதனாலும், மூடப்பட்ட பல கத்தோலிக்க ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டதினாலும் மக்கள் இந்தப் பெருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடியதைக் காணமுடிகிறது. ✦

நேர்காணல்:- கா.பஞ்சரத்தினம்

---

# உருத்திராட்சம் அலங்காரமல்ல; ஆன்மீக வாழ்வின் ஒரு அங்கம்!

தீய எண்ணங்களும், தீய செயல்களும் அறவே இல்லாத ஆசாரங்களுடன், பக்தியுடன் வாழ்கின்றவர்களே, உருத்திராட்ச மணிகளை அணிவதற்கு முழுத்தகுதி வாய்ந்தவர்கள். பாவிகளும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும், போலிகளும் உருத்திராட்ச மணிகளை அணிவதால் பெறும் நற்பலன் ஒன்றும் இல்லை.

பக்குவப்பட்ட மனமும், பக்தி உணர்வும், தூய்மையான உடலும் இருந்தால், ஆண்களில் பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வயது வரம்பில்லாமல் உருத்திராட்ச மணிகளைப் புனையலாம்.

பெண் துறவிகள் வயது வரம்பில்லாமல் உருத்திராட்ச மணிகளைப் புனையலாம்.

இல்லறத்தில் வாழ்ந்து துறவு மனப் பான்மையுடன் இருக்கும் பெண்கள் நாற்பத்தைந்து வயதுக்கு மேல் உருத்திராட்ச மணிகளை அணிவது மிகவும் நல்லது.

உருத்திராட்சமணிகள் அலங்காரப் பொருட்கள் அல்ல, நாகரிகத் தோற்றத்திற்காக அணியத் தகுந்தன அல்ல. அவை முழுக்க முழுக்க ஆன்மீகத்துடன் தொடர்புடையவை.

உச்சியிலிருந்து கொப்பூழ்வரை உருத்திராட்ச மணிமாலைகளை அணியலாம். மணிகளின் எண்ணிக்கை வரம்புகளாவன.

உச்சி (குடுமி) - 1 மணி, தலை (நெற்றிக்குமேல்) 3 மணிகள், காதுகள் - ஒவ்வொன்றிலும் 1 அல்லது



ஆன்மீக அரங்கம்

3 அல்லது 6 மணிகள், கழுத்து - 1 அல்லது 27 அல்லது 32 மணிகள், மார்பு - தாழ்வடம் 54 அல்லது 108 மணிகள், மேல்கைகள் - ஒவ்வொன்றிலும் 16 மணிகள, கைமணிக்கட்டுகள் ஒவ்வொன்றிலும் 12 மணிகள்.

மேற்கண்ட ஏழு உறுப்புக்களைத தவிர வேறு உறுப்புக்களில் உருத்திராட்ச மணிகளை அணிவது குற்றம் எனப்படுகிறது. அணிவதற்கும் பொருத்தமான மணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

முதலில் ஐந்தெழுத்தை உச்சரித்தபடியே திருநீற்றை நெற்றி முதலிய பதினாறு உறுப்புக்களில் புனைய வேண்டும்.

அடுத்து மீண்டும் சிவ மந்திரங்களைக் கூறியும் அல்லது ஐந்தெழுத்தை உச்சரித்தும் மேற்குறித்த ஏழு உறுப்புக்களில் உருத்திராட்ச மணிகளைச் சூடவேண்டும்.

திருநீறும், உருத்திராட்ச மணிகளும் புனைந்த சிவனடியார்களின் தோற்றத்தில் மங்கலச் சிவப்பொலிவுதானே வரும்.

தவசிகள், முனிவர்கள், மடாதிபதிகள், சமயச் சான்றோர்கள், கோயில் பூஜைக் காரியங்களைச் செய்யும் குருக்கள், பட்டர்கள், சித்தர்கள், சிவபக்தர்கள் முதலியவர்கள் உருத்திராட்ச மணிகளை அணியும் வழக்கமுடையவர்கள். அவற்றை இவர்கள் நிச்சயம் அணிய வேண்டிய காலங்கள்

- உருத்திராட்ச மணிகள் சிவனுடன் நெருங்கிய தொடர்புடைவையாகையால், சிவபூஜைக் காரியங்கள் செய்யும் எப்போதும் உருத்திராட்ச மணிகளை அணிந்திருக்க வேண்டும்.
- சந்தியா வந்தனத்தின்போது
- சிவமந்திர ஜபத்தின்போது.
- சிவத் தியானத்தின்போது
- சிவாலய தரிசனத்தின்போது
- சிவபுராணத்தைப் படிக்கும் போது
- பிறர் சிவபுராணம் படிக்கக் கேட்கும்போது
- பன்னிரு திருமுறைப் பாராயணத்தின்போது
- சைவசமயச் சொற்பொழிவின் போது உருத்திராட்ச மணிகளை அணிந்திருப்பது மிக அவசியமாகும். ❋

கவிமாமணி
அருளானந்தன்.

---

## ராம்கோ சீமெந்து விலை குறைப்பு

ராம்கோ சீமெந்தின் விலை பக்கற் ஒன்று 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதனை ஈஸ்வரபகவான் அன் கொம்பனி நிர்வாக முகாமையாளர் ப.வரதராஜசிங்கம், பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

சீமெந்தை பருத்தித்துறை - இறங்குதுறையில் வைத்து கொள்வனவு செய்வோருக்கு 400 ரூபாவுக்கு விநியோகிக்கப்படும்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் சீமெந்து 350 ரூபாவாக விற்கப்படுவதாகவும் நாளடைவில் இங்கும் அதேவிலைக்கு விற்பனை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (கி,ச)

## தும்புத் தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தொழில் துறை திணைக்களத்தினால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தும்புப் பயிற்சி நிலையத்தல் பயிற்சிகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

துன்னாலை தெற்கு தும்புத் தொழிற்பயிற்சி நிலையத்தில் வைத்து வழங்கப்படும் ஆறு மாதகால பயிற்சிநெறிக்கு, 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பலாம். எதிர்வரும் 20 ஆம் திக்திக்கு முன்பதாக, பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

# அனைத்துப் பாடசாலைகளுக்கும் சமமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

## தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர்

(திருகோணமலை)

வட-கிழக்குப் பகுதிகளிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்குமான நிதியுதவிகள் சமமாக வழங்கப்பட வேண்டும் என தமிழீழ கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற செயலமர்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீடுகளில் சில பிரபல பாடசாலைகளுக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆடம்பரக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால், கிராமப்புறப் பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகள் கூடக் கிடைப்பதில்லை.

2004 ஆம் ஆண்டில் அனைத்துப் பாடசாலைகளிலும் அடிப்படை வசதிகள் இருக்கத்தக்கவாறு இவ்வருட செயற்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அடுத்த வருடம் மலசலகூடம், கிணறு, விளையாட்டு மைதானம், மின்சாரம், கட்டடவசதிகளற்ற எந்தவொரு பாடசாலையும் இருக்கக்கூடாது.

தற்போது கிடைக்கவுள்ள வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு சகல பாடசாலைகளுக்கும் சமமான அளவில் நிதியைப் பங்கீடு செய்யப்படும். கல்வி அபிவிருத்திக்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம் ஏக பிரதிநிதித்துவம் விரைவில் உருவாக்கப்படும்

## அமைச்சர் நூர்தீன் மசூர் கூறுகின்றார்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி விரைவில் தீர்க்கப்பட்டு, முஸ்லிம்களுக்கான ஏக பிரதிநிதித்துவம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மூன்று துண்டுகளாக உடைந்திருப்பதாகவும், முஸ்லிம்கள் சார்பில் பேச்சுக்களில் கலந்துகொள்ளச் சரியான பிரதிநிதிகள் இல்லை என்றும் தாய்லாந்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே, நூர்தீன் மசூர் இவ்வாறு தெரிவித்துள்ளார். முஸ்லிம்களுக்கான சரியான தலைமை ஒன்றைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத மின் பாவனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கு இருபத்திநான்கு மணி நேரமும் மின்சாரம வழங்கத் தொடங்கிய பின், சட்டவிரோத மின் பாவனையாளர்களின் தொகையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமான முறையில் மின்னைப் பெற முயற்சிப்போரால் மின் தடைகள் ஏற்படுவதும், வீணான உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் தற்போது அதிகரித்துள்ளது.

# பொங்கல் –2003 வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியின் முன்னணி வர்த்தக நிலையங்கள் இணைந்து , யாழ்.வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் 'பொங்கல் - 2003' என்னும் வர்த்தகக் கண்காட்சி இன்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பொங்கல்- 2003 கண்காட்சி குறித்து, நேற்று யாழ்.வணிகர் சங்க அலுவலகத்தில், கொழும்பிலிருந்து வருகை தந்த மேற்படி நிறுவனங்களின் தலைவரும், யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவரும் இணைந்து செய்தியாளர் சந்திப்பொன்றை நடாத்தினர். இச் செய்தியாளர் சந்திப்பில் இவர்கள் தெரிவித்ததாவது,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்குடன் நடைபெறும் இக்கண்காட்சியில், மூன்றில் ஒரு பகுதி இடம் உள்ளூர் உற்பத்தியாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் பங்குபற்றும் உள்ளூர் கைத்தொழில் நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீட்டிற்கு எந்தவிதமான கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

இக்கண்காட்சி மூலம் தென்னிலங்கையிலுள்ள தொழில் நுட்ப அறிவையும், ஆற்றல்களையும் யாழ்.வர்த்தகர்களும், கைத்தொழிலாளர்களும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும், இப்படியானதோர் பிரமாண்டமான கண்காட்சி இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது இதுதான் முதல் முறை எனவும் இவர்கள் தெரிவித்தனர்.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இக்கண்காட்சி இரவு 7.30 மணி வரையும் தினமும் நடைபெறும். நாளையும் நாளை மறுதினமும் இக்கண்காட்சி தொடரவிருக்கின்றது. (லி)

# மத்திய கிழக்கிலிருந்து திரும்பும் பணிப்பெண்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியச்சென்ற வீட்டுப் பணிப்பெண்கள் பெருமளவில் அங்கிருந்து திரும்பத் தொடங்கியுள்ளனர்.

வேலைக்கு அமர்த்தப்பட்ட இடங்களில் பாலியல் துன்புறுத்தல், சித்திரவதை போன்றவற்றுக்கு உட்படுத்தப்படுவதால், அங்கிருந்து பெருமளவிலான வீட்டுப் பணிப்பெண்கள் திரும்பிவரத் தொடங்கியுள்ளனர். கடந்த 8 ஆம் திகதி மட்டும் 86 பேர் இவ்வாறு கொழும்பு திரும்பியுள்ளனர்.

# மிருசுவிலில் 8 பேரை படுகொலை செய்த ஐந்து படையினருக்கு எதிராக வழக்கு

## 29 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியிலுள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்றவேளை, இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட எட்டுப் பேரினுடைய படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு, எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் அடங்கிய ட்ரயல் அட்பார் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி மிருசுவில் பாம் பகுதியிலுள்ள தமது வீட்டினைப் பார்க்கச் சென்றவேளை, இராணுவத்தினரால் 5 வயது சிறுவன் உட்பட எட்டுப்பேர் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மரணவிசாரணை சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் பிரேம்சங்கர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தப்படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், 14 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, பின்னர் அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தனர்.

படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்த சட்டமா அதிபர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என நிரூபிக்க போதிய ஆதாரம் இல்லாமையால், ஒன்பது இராணுவத்தினரை விடுதலை செய்ய நீதிமன்றுக்குச் சிபார்சு செய்தார்.

எஞ்சிய ஐந்து இராணுவத்தினருக்கு கொழும்பு மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபராகக் கருதப்படும் சிப்பாய் ஒருவரும், சம்பவத்தின்போது தப்பிவந்த முக்கிய சாட்சியான பொ.மகேஸ்வரன், சடலங்களை மருத்துவப் பரிசோதனை செய்த மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை ஆகியோரும் நீதிபதிகள் முன்னிலையில் ஆஜராகவுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட குடும்பத்தினரின் சார்பில் மனித உரிமைகள் மையத்தின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் மன்றில் வாதாடவுள்ளனர்.

(ச,கி)

# அதிர்ஷ்ட வாரம்

**10-01-2003 தொடக்கம் 16-01-2003**

### மேடம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

இந்தவாரம் மேட ராசிக்காரர்களுக்கு நன்மையும் தீமையும் கலந்த வாரமாக அமையும். பணம் வரும் கையில் நிற்காது. ஏதோஒரு வழியில் செலவாகிவிடும். இடையிடையே சிறு சுகயீனங்கள் வந்து குணமாகும். மாணவர்கள் கல்வியல் அதிக ஈடுபாடு காட்டுவர். வியாபாரிகளுக்கு முதலீட்டிற்குரிய லாபத்தை எதிர்பார்க்க முடியாது.

### இடபம்



கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.

அடிக்கடி தேகசுகம் பாதிக்கப்படும். பொருள் கைவிட்டுப் போகலாம். மனம் ஒரு நிலையில் இராது. ஆனால் தொழில் விடயத்தில் நன்மையான வாரம். மனப்பயம் அதிகமாக இருக்கும். மாணவர்களுக்கு சமனான கல்வியைக் கொடுக்கும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் தடைப்படும். தாமதமாகும்.

### மிதுனம்



மிருகசீரிடம் 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

வாகனம் பூமி சேரக்கூடிய காலம. பெண்களால் நன்மையுண்டு. வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். வியாபாரிகளுக்கு அதிகளவில் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. பெண்களுக்கு குடும்பத்தில் நல்ல அனுசரணை கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டு.

### கர்க்கடகம்



புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

தொழிலில் ஸ்திரத்தன்மையும் பொருள் வரவையும் கொடுக்கும். மனக்குழப்பம், தேகத்தில் சூட்டு வருத்தங்களையும் கொடுக்கும். பொருள் வரவைக் கொடுத்தாலும் மனதில் நிம்மதி இராது. பெண்களுக்கு அயலவருடன் பிரச்சினைகளைக் கொடுக்கும். மாணவர்களுக்கு சோர்வையும், உற்சாகமின்மையையும் கொடுக்கும்.

### சிங்கம்



மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்

அதிக பணப்புழக்கம் இருக்கும். அதிக அலைச்சலையும் கொடுக்கும். தானதருமம், புண்ணிய தீர்த்த தரிசனம் போன்றன உண்டு. மனதில் ஒருவித கலக்கம் இருக்கும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். வியாபாரிகளுக்கு அதிக முதலீடு செய்யலாம். மாணவர்களுக்கு புதிய அனுபவம். கல்வியில் முன்னேற்றம்.

### கன்னி



உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்

வெளியூர் பிரயாணங்களால் நன்மை. தொழிலில் எதிரிகள் தோன்றுவர். ஆனால் உங்கள் சாதுரியத்தால் அவர்களை வெற்றிகொள்வீர்கள். பொருள் லாபமுண்டு. பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். குடும்ப சுகமுண்டு. மாணவர்கள் அதிக கவனம் எடுக்க வேண்டும். போட்டி அதிகமாக இருக்கும்.

### துலாம்



சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்

தேகத்தில் இனம் தெரியாத வியாதி. சளி இருமல் வாட்டும். பிரயாணத்தால் கஷ்டம். வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படும். சகோதர வழியால் கவலை உண்டு. பெண்களுக்கு மனவேதனையையும் ரோக பயத்தையும் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தமாட்டார்கள். கல்வியில் பின்னடைவு ஏற்படும்.

### விருச்சிகம்



விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை

எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். இருப்பினும் மனதில் ஒருவித குறை காணப்படும். சிறை பயம் உண்டு. மனக்குழப்பம் காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். பெண்களுக்கு கணவரின் ஆதரவு கிடைக்கும். மாணவருக்கு முன்னேற்றமான காலமாகும்.

### தனு



மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

தன்னால் கேடு விளையும். நோயைப்பற்றிய பயம் மனதில் இருக்கும். அதிக பிரயாசைப்பட்டு சிறிது பலனை அடைய நேரிடும். காலில் காயங்கள் ஏற்படும். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். பெண்களுக்கு பொருள்வரவைக் கொடுக்கும். மாணவருக்கு கல்வியில் பின்னடைவைக் கொடுக்கும்.

### மகரம்



உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்

அரசாங்கத்தால் கஷ்டம் உண்டு. பொருட்சேதம் உண்டு. தேகசுகக் குறைவு. குடும்ப சுகம் உண்டு. பெண்களுக்கு விவாக முயற்சிகள் கைகூடும். வியபாரிகளுக்கு அவதானமாக இருக்கவேண்டிய காலம். பல வழிகளிலும் சிக்கலில் மாட்டிக் கொள்வீர்கள். மாணவர்களுக்கு நன்மையான வாரம்.

### கும்பம்



அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

தேகசுகம் பாதிக்கப்படும். அயலவருடன் வீண் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். மனஅமைதி இல்லாமல் தவிப்பீர்கள். தொழிலாளரின் ஒத்துழைப்பு கிடைக்காது. வியாபாரிகள் அதிக போட்டியை சந்திக்கவேண்டி வரும். பெண்களுக்கு குடும்பத்தில் ஒட்டுதல் இல்லாமல் இருக்கும். மாணவர்களுக்கு உற்சாகமில்லாத வாரமாக அமையும்.

### மீனம்



பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி

பொருள் வரவு, காரிய வெற்றி உண்டு. இருப்பினும் மனதில் பயம் இருக்கும். நல்ல வாழ்வு கிடைக்கும். பெரியோர் சந்திப்பு ஆசீர்வாதம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வியாபாரிகளுக்கு முதலீட்டிற்கேற்ற லாபம் கிடைக்கும். பெண்களுக்கு குடும்ப சுகம், தேகசுகம் உண்டு. பொதுவாக மீன ராசிக்காரர்களுக்கு நன்மையான வாரமாக இருக்கும்.

பிரபல சோதிடர்- எஸ்.குகநேசன்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதிப்புற்ற பெண்கள் பிரச்சினை ஆராய்வதற்கு மகளிர் உபகுழு!

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வையும், அபிவிருத்திப்பணிகளையும் மேற்கொள்ளவென உபகுழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் ஏற்கனவே தீர்மானித்ததன் பிரகாரம், இந்தக்குழு தாய்லாந்துப் பேச்சில் உருவாக்கப்பட்டது.

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் - அந்நாட்டைச்சேர்ந்த பெண் ஒருவரை வள நிபுணராகக் கொண்டமையும் இந்தக்குழுவுக்குத் தேவையான நிதியுதவியை அந்நாடே வழங்கவிருக்கிறது.

அரசாங்கத்தரப்பிலும், விடுதலைப்புலிகள் தரப்பிலும் தலா ஐந்து பேர் கொண்ட இந்தக் குழுவில் - விடுதலைப்புலிகளின் தரப்பில் - சிவகாமி சுப்ரமணியம், ரேணுகா சண்முகராஜா, மதிமலர் பாலசிங்கம், சிறிதேவி சின்னத்தம்பி, வசந்த பிறேமினி சோமசுந்தரம் ஆகியோரும்-

அரசாங்கத்தரப்பில் கலாநிதி குமாரி ஜெயவர்த்தன, கலாநிதி தீபிகா உடகம, குமுதினி சாமுவெல், ∴பைசூன் சக்கரியா, கலாநிதி ∴பசீலா ரியாஸ் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த உபகுழுவின் செயற்பாட்டு விதிகளும் ஏனைய விவகாரங்களும் - இந்த உபகுழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவுள்ளன.

## யாழ்.வருகிறார்....

வது 35 ஆண்டுகளுக்கு பின்னர் இடம்பெறுகின்றது. இவர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார்.

## பாதுகாப்பு....

டும் கையளிப்பது தொடர்பான திட்டத்தை தயாரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்காக எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் மீள் குடியமர்வுக்குத் தேவையான நிதியை எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம் என ஆராய்வது எனவும் இரு தரப்பும் இணக்கம் கண்டுள்ளன.

இதேசமயம், மீள்குடியமர்வு தொடர்பாக ஆராய- அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தை, அவசர மனிதாபிமான புனர்வாழ்வு தேவைக்கான உபகுழுவின் அரசு -புலிகள் தரப்புப்பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தை நவீனப்படுத்த யாழ். தளபதி திட்டம் சமர்ப்பிப்பு

இராணுவத்தினை நவீனமயப்படுத்தும் திட்டமொன்றை - யாழ் பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவும் இணைந்து, இராணுவ மறுசீரமைப்புக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

குறிப்பாக, இராணுவத்தின் விசேட படைப்பரிவினதும் (எஸ்.எவ்) கொமாண்டோப் படையினதும் பய்ற்சிகளை, விசேட நிலைக்குக் கொண்டு செல்லவேண்டுமென, இந்த இரண்டு இராணுவ உயரதிகாரிகளும் தயாரித்த ஆலோசனை- பிரதித்தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவினால் முழுமையான அறிக்கை வடிவில் தயாரிக்கப்படவிருக்கிறது.

## படையினரை...

லிக் கொண்டிருப்பதாக அமையும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், சுமார் முந்நூறுக்கும் அதிகமான வீடுகளிலும், அரச கட்டடங்களிலும் இராணுவம் முகாமிட்டிருக்கிறது. இதை நாம் அங்குள்ள இராணுவத்தினருடன் கதைத்திருக்கிறோம். காலப்போக்கில் அங்கிருந்து வெளியேறுவதாக அவர்கள் கூறியுள்ளனர் என்றும் கேணல் கருணா மேலும் தெரிவித்தார்.

இவற்றைவிட, வடக்கிலும் கிழககிலும் செயற்படும் சட்டவிரோத ஆயுதக்குழுக்கள் குறித்தும் பேச்சுவார்த்தையின்போது தாம் எடுத்துக் கூறியதாக கேணல் கருணா தெரிவித்தார்.

## சுவாமியின் வழக்கு தள்ளுபடி

(சென்னை)

விடுதலைப் புலிகள் பங்குகொள்ளும் எத்தகைய சர்வதேச, தேசிய மாநாடுகளிலும் - இந்திய அரசாங்கம் பங்குகொள்ளக் கூடாதென்றும், தனது பிரதிநிதிகளை அங்கு அனுப்பக் கூடாதென்றும் - ஜனாதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கடந்த நவம்பர் 25 இல் - ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் இந்தியா பங்குபற்றக்கூடாது என்ற பொது நலன் வழக்கை அவர் தாக்கல் செய்திருந்தார்.

அவ்வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியானபோதே - நீதிபதிகள், இவ்வாறான முடிவை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென எவரும் கேட்கமுடியாது எனக்கூறி வழக்கினைத் தள்ளுபடி செய்தனர்.



நேற்று நொகன்பத்தமில் பேச்சுவார்த்தை முடிவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும் அமைச்சர் பீரிஸிடம் இரகசியமாக உரையாடுகின்றார் சொல்ஹெய்ம்.

# காணாமற்போனோர் விடயம் ஆராய ஐ.சி.ஆர்.சி. சம்மதம்

## பதினோராயிரம் முறையீடுகள் ஆராய்வு

(கொழும்பு)

யுத்தப்பிரதேசங்களில் இருந்து காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராய, சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் இலங்கைத் தலைவர் மார்க்கஸ் புருடமன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், தாய்லாந்தில் இருந்து தொலைபேசி மூலம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே, இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

யுத்தப் பிரதேசங்களில் இருந்து காணாமற்போனோர் தொடர்பாக சுமார் 20 ஆயிரம் முறையீட்டுக் கடிதங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிற்கு கிடைத்துள்ளதாகவும், இதில் 11 ஆயிரம் கடிதங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் குழுவின் பேச்சாளர் சுகுமார் றொக்வூட் தெரிவித்தார்.

யுத்தப் பிரதேசங்களில் காணாமற்போனோர் தொடர்பாக இலங்கை இராணுவம், விடுதலைப் புலிகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப பிரதிநிதிகள் கூடி ஆராய இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

## அரசின்....

இது எப்படி மேற்கொள்ளப்படுகின்றது என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம். அவர்களும் (அரசு) அதுவரை எம்மை பொறுமையாக இருக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இலங்கை அரசு எந்த நாட்டிடம் உதவி கேட்கிறது என்பது பற்றிப் பிரச்சினையில்லை. எனினும், நாம் இந்தியாவின் ஆலோசனையைக் கேட்கத் தயாராக இருக்கிறோம். இந்தியாவுக்கு, இங்கு புலிகளோடு போர் செய்து தோல்விகண்டு வெளியேறிய அனுபவம் உண்டு. அந்த அனுபவங்களை வைத்து சரியான தீர்வுத்திட்டத்தைத் தருவார்கள் என்று எதிர்பார்த்திருக்கின்றோம். அவர்களின் திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வது என்பது இதன் அர்த்தமல்ல. எம்மைப் பொறுத்தவரையில், மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும்.

காணாமற்போனோர் தொடர்பாக அரசினால் உறுதியான முடிவு எடுக்க முடியாமல் உள்ளது. இராணுவம் மீதான அதிகாரம் ஜனாதிபதியிடம்தான் உண்டு. ரணிலிடம் இந்த அதிகாரம் பெரிதாகஇல்லை. இராணுவத்தின் இத்தகைய கொடுமைகளை வெளிக்கொண்டுவர வேண்டிய திடகாத்திரம் இவர்களிடம் இல்லை. சந்திரிகாவுடன் முரண்பட்டால் அவர் அரசைக் கலைத்து விடுவார் என்ற அச்சம் இவர்களிடம் இருக்கிறது.

மக்களுக்கு உதவிகள் கிடைக்க வேண்டும். மக்கள் சமாதானத்தின் பெறுபேறுகளை அனுபவிக்க வேண்டும். இது முழுமையாக நடைபெற்றதன் பின்னர்தான் நாங்கள் மக்களுக்கு உருப்படியாக ஏதாவது சொல்லலாம். மக்களின் உரிமைக்காகவும், அவர்களின் அவலத்தைப் போக்கவும், நாங்கள் மிகவும் தூய்மையுடனும், உண்மையுடனும் செயற்படுகிறோம. களத்தில் எவ்வாறு போராடினோமோ அதேபோல், இராஜதந்திரக் களத்திலும் போராடுகிறோம் என்பதை மக்களுக்குச் சொல்லவிரும்புகிறோம் என அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

## பழ வியாபாரிகள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக, நடைபாதையில் வைத்து பழவகைகளை விற்றுக் கொண்டிருந்த நடைபாதை வியாபாரிகள் பொலிஸாரால் நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களது பொருட்களும் பொலிஸாரால் கூடவே எடுத்துச் செல்லப்பட்டன.

நடைபாதை வியாபாரம் ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், சட்டத்தை மீறி நடந்து கொண்டமையினால், இவ்வியாபாரிகள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (62)

## போர் நிறுத்த...

அரசாங்கத்தரப்பில் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும், விடுதலைப் புலிகளின் தரப்பில் கிழக்குப் பிராந்தியத்தளபதி கேணல் கருணாவும்- இதற்குப் பொறுப்பானவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இச்சந்திப்பின் அறிக்கையும் போர் நிறுத்தம் பற்றிய ஏனைய விவகாரங்களும், இந்த இருவராலும் மாதாந்தம் நடைபெறும் அரசு - புலிகள் பேச்சில் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும் எனவும் இணக்கம் காணப்பட்டது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.45 | 156.77 |
| 1 யூரோ | 101.07 | 102.22 |
| 1 சுவிஸ் பிராங் | 69.27 | 70.34 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 55.35 | 56.32 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

T.V. இலவசம்!
வட்டி இல்லை!!
இதைவிட வேறு என்ன வேண்டும்?
உங்கள் பார்வைக்கு வேம்படி மகளிர் கல்லூரியில்
ஜனவரி - 10-12 வரை
PONGAL EXHIBITION & TRADE FAIR இல்
C.47
GUDWIL
55, துட்டுகெமுனு வீதி, பாமன் கடை, தெஹிவளை.
தொ.பே.இல. 818415
(098)



சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தினத்தையொட்டிய
கவிதை, பேச்சுப் போட்டிகள் – 2003

போட்டி விதிகள்

- 25 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்கு கொள்ளலாம்.
- விடயம்:- "இந்துசமய மறுமலர்ச்சியில் சுவாமி விவேகானந்தா" எனும் விடயப் பரப்பினுள்.
- போட்டிகளுக்குரிய தலைப்புகள் போட்டி நாளன்றே வழங்கப்படும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி:- 14.01.2003

வெற்றி பெறுவோருக்கான பரிசாக.
1ம்பரிசு - ரூபா 1000.00
2ம்பரிசு - ரூபா 750.00
3ம்பரிசு - ரூபா 500.00

விண்ணப்பங்கள் நேரிலோ/தபால் மூலமோ அனுப்பவேண்டிய முகவரி
கவிமாமணி மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்,
ஆசிரியர், 120/4 திருவள்ளுவர் சாலை,
அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சுவாமியின் சேவையில்
தரிசனம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சி-458)

ஆன்மீகப் போட்டிகளை ஊக்குவிப்பவர்கள்
இல.54, அஜந்தாஸ் ரெக்ஸைரல்ஸ்
பெரியகடை – யாழ்ப்பாணம்.

பொங்கல் கண்காட்சி – 2003
அண்ணா கோப்பி நிறுவனத்தாரின்
மலிவு விற்பனை
10-01-2003 தொடக்கம் 12-01-2003 வரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அண்ணா நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.
(சி-457)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.